# வேலூர் மாவட்ட தொல்லியல் கையேடு



ஆசிரியர்
மா. கலைவாணன்

பதிப்பாசிரியர்
முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை-600 008
2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042

சென்னை-600 009

# வேலூர் மாவட்டத் தொல்லியல் கையேடு

பதிப்பாசிரியர்

**முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,**

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

ஆசிரியர்

**மா. கலைவாணன்**

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை -600 008

2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Vellur Archaeological Guide |
| Editor | : | Principal Secretary and Commissionor |
| Copyright | : | Tamilnadu State Dept. of Archaeology |
| Subject | : | History & Archaeological Guide |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 232 |
| Year | : | 2011 |
| Type Point | : | 12 |
| No. of Pages | : | 72 |
| No. of Copies | : | 1000 |
| Paper Used | : | 80 Gsm Maplitho |
| Printer | : | Tamcos printers<br>46, Peters Road,<br>Royapettah,<br>Chennai-14 |
| Publisher | : | State Dept. of Archaeology,<br>Tamil Valarchi Valaagam,<br>Halls Road, Egmore,<br>Chennai - 600 008. |
| Price | : | Rs. 30.00 |

# உள்ளே


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | |
| | முன்னுரை | |
| 1. | வேலூர் மாவட்டம் அமைவிடம் | 1 |
| 2. | வேலூர் மாவட்டத்தின் தொல்பழங்காலம் | 3 |
| 3. | வேலூர் மாவட்டத்தில் புதிய கற்காலம் | 7 |
| 4. | வேலூர் மாவட்டத்தில் பெருங்கற்காலம் | 9 |
| 5. | வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அகழாய்வுகள் | 13 |
| 7. | ஆர்க்காட்டுச் சின்னங்கள் | 32 |
| 6. | அவரக்கரை தானிய உறை | 37 |
| 8. | வேலூர் மாவட்டப் பாறை ஓவியங்கள் | 39 |
| 9. | வேலூர் மாவட்ட அருங்காட்சியகங்கள் | 47 |
| 10. | வேலூர் மாவட்டத்தின் சுருக்கமான வரலாறு | 52 |
| 11. | துணை நூல்கள் | 56 |

## அட்டைப்பட விளக்கம்

முன்பக்கம் : பச்சைக்கல் மசூதி - கி.பி. 18-ஆம் நூற்றாண்டு

பின்பக்கம் : 1. மகேந்திரவாடி - பல்லவ அரசன் மகேந்திரன் காலம்

2. இரு வீரர்கள் சண்டைக் காட்சி - நடுகல்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008

# பதிப்புரை

தமிழகத்தில் உள்ள மாவட்டங்களின் வரலாற்றினையும், வாழ்வியல் முறைகளையும், சிறப்புகளையும் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் மாவட்டத் தொல்லியல் கையேடுகள் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித் தனியே வெளியிடப்படுகின்றது. அவ்வகையில் வேலூர் மாவட்டத்தின் வரலாற்றையும், தொல்லியல் முக்கியத்துவங்களையும் தொகுத்து வெளியிடப்படுகின்றது.

வேலூர் மாவட்டத்தின் வரலாற்றினை சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய கற்காலம் முதல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை அடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசால் கோவையில் சிறப்புற நடத்தப்பட்ட உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு நிதி உதவியுடன் இந்நூலை வெளியிட அனுமதியளித்த தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வேலூர் மாவட்டத்தின் வரலாறு, அகழாய்வு செய்த இடங்கள், கல்வெட்டுகள், மட்டும் வரலாற்றுச் சின்னங்களைத் தொகுத்து தமது கள ஆய்வின் பயன்களையும் சேர்த்து இந்நூலை எழுதியுள்ள காப்பாட்சியர் திரு. மா. கலைவாணன் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரித்தாகுக.

இந்நூலின் பதிப்புப் பணியினை மேற்கொண்ட இத்துறையின் பதிவு அலுவலர் முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கும், இந்நூலினை நன் முறையில் டிடிபி செய்து அட்டைப்படம் வடிவமைத்த திருமதி தே. சத்தியவதி மற்றும் அச்சுப்பிழைத்திருத்திய திரு. மா. ஆ. சங்கர் அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

இந்நூல் வேலூர் மாவட்ட மக்களுக்கும், அப்பகுதி மாணவர்களுக்கும் மற்றும் ஆய்வாளர்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாக அமையும் என நம்புகின்றேன்.

சென்னை-600 008
23-02-2011

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

# முன்னுரை

தமிழகத்தின் வட எல்லை மாவட்டங்களில் ஒன்றாக வேலூர் மாவட்டம் திகழ்கின்றது. இம்மாவட்டம் ஆந்திரம் மற்றும் கர்நாடக எல்லைகளை ஒட்டி உள்ளதால் எல்லைப்பகுதிகளில் தமிழுடன் தெலுங்கு மற்றும் கன்னடமும் அங்குள்ள மக்களால் பேசப்பட்டு வருகின்றது. வேலூர் மாவட்டத்தில் வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே பழைய கற்கால மனிதர்கள் வாழ்ந்தமைக்காண தடயங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. சிறுசிறு குன்றுகள், காடுகள், சமவெளி என அனைத்துப் பகுதிகளையும் கொண்டதாக இம்மாவட்டம் திகழ்கின்றது. விவசாயம், நெசவு, தோல் பதனிடுதல் போன்றவை இம்மாவட்ட மக்களின் முக்கியத் தொழில்களாக உள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்தின் வரலாற்றினையும், தொல்லியல் சின்னங்களையும், வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடங்களையும் படித்தவர் முதல் பாமர மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் மாவட்டத் தொல்லியல் கையேடுகள் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் இத்துறையின் முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் திருமிகு முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப. அவர்களின் அறிவுறையின் படியும் வழிகாட்டுதலின்படியும் வெளியிடப்படுகின்றது.

அவ்வழியில் வேலூர் மாவட்டக் கையேடு எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் வேலூர் மாவட்டத்தின் நெடிய வரலாறு, இம்மாவட்டத்தில் நடைபெற்ற அகழாய்வுகள், வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடங்கள், முக்கியமான கல்வெட்டுகள் தொல்லியல் சின்னங்கள் ஆகியவற்றைத் தொகுத்துத் தந்துள்ளேன். எனது பணிக்காலத்தின் பெரும் பகுதியை இம்மாவட்டத்தில் பணி செய்ததாலும் கள ஆய்வுகள் மேற்கொண்டதாலும் இந்நூல் பெரும்பாலும் நான் நேரடியாகப் பார்த்துப் பெற்ற தரவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.

இம்மாவட்டக் கையேடு சிறப்புற அமைய வழி காட்டியாக அமைந்த எம்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் திருமிகு முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

இந்நூல் உருவாகத் துணை செய்த இத்துறையின் பதிவு அலுவலர் திருமதி முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கும், ஆர்க்காடு அகழ்வைப்பகப் பணியாளர்கள் திரு கோ. சக்திபாரதி, திரு பொ. சண்முகம், திரு க. குப்புசாமி ஆகியோருக்கு எனது மனம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூலினை சிறப்பாக அச்சிட்டு வெளியிட உதவிய அச்சுப்பிரிவு சகோதர, சகோதரிகளுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மா. கலைவாணன்,
காப்பாட்சியர்,
ஆர்க்காடு.

# வேலூர் மாவட்டம் அமைவிடம்

வேலூர் மாவட்டம் என்று இன்று அழைக்கப்படும் பகுதி முதன் முதலில் 1801-ஆம் ஆண்டில் வடார்க்காடு மாவட்டம் என பெயரிட்டு ஏற்படுத்தப்பட்டது. அப்பொழுது வடார்க்காடு மாவட்டத்தின் தலைநகரமாக சித்தூர் விளங்கியது. ஸ்டராட்டன் என்ற ஆங்கிலேயர் இம்மாவட்டத்தின் முதல் ஆட்சியரானவர் இம்மாவட்டம் 1911-இல் அன்றைய சேலம் மாவட்டத்திலிருந்த திருப்பத்தூர் வட்டமும் தென்னார்க்காடு மாவட்டத்தில் இருந்து திருவண்ணாமலை வட்டமும் இணைக்கப்பட்டு மறுசீரமைக்கப்பட்டது. அது முதற்கொண்டு வேலூரைத் தலைமை இடமாகக் கொண்ட வடார்க்காடு மாவட்டம் உதயமானது. மீண்டும் இம்மாவட்டத்தில் இருந்து கங்குந்தி ஜமீன் பகுதிகள் பிரிக்கப்பட்டு சித்தூர் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. வடார்க்காடு மாவட்டம் 30-9-1989-இல் வேலூரைத் தலைநகரமாகக் கொண்டு வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் எனவும் திருவண்ணாமலையைத் தலைமை இடமாகக் கொண்டு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் எனவும் ஏற்படுத்தப்பட்டன. வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டம் 1-7-1997 அன்று வேலூர் மாவட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தமிழகத்தின் வட எல்லையில் அமைந்துள்ள வேலூர் மாவட்டத்தின் கிழக்கில் திருவண்ணாமலை மாவட்டமும், காஞ்சிபுரம் மாவட்டமும் ஆந்திர மாநிலமும் எல்லைகளாக உள்ளன. வடக்கில் திருவள்ளூர் மாவட்டமும், ஆந்திர மாநிலமும், எல்லைகளாக உள்ளன. மேற்கில் ஆந்திர மாநிலமும் கிருட்டிணகிரி மாவட்டமும் எல்லைகளாக உள்ளன. இம்மாவட்டத்தின் தென் எல்லைகளாக திருவண்ணாமலை மற்றும் தருமபுரி மாவட்டங்கள் அமைந்துள்ளன.

இம்மாவட்டத்தின் மொத்த பரப்பளவு 6077 சதுர கிலோ மீட்டர்களாகும். கால் மட்டத்தில் இருந்து 1048.5 மீட்டர் உயரமுடைய

ஏலகிரி மலையும் உலகிலேயே முதன்மைத்தரம் வாய்ந்த சந்தன மரங்கள் வளரும் ஜவ்வாது மலைத் தொடர்களும் இம்மாவட்டத்தில் உள்ளன.

இம்மாவட்டத்தில் சென்னையிலிருந்து செல்லும் தேசிய நெடுஞ்சாலையும் அதேபோல் பாண்டிச்சேரியில் இருந்து பெங்களூர் செல்லும் சாலையும் ஊடுருவிச் செல்வதாலும் சென்னை–பெங்களூர் இருப்புப் பாதையும் சென்னை–கோவை இருப்புப் பாதைகளும் மற்றும் காட்பாடி–சித்தூர் இருப்புப் பாதைகளும், வேலூர்–விழுப்புரம் இருப்புப் பாதை வழிகளும் இம்மாவட்டத்தின் மையப் பகுதிகளில் செல்வதால் இம்மாவட்டத்தை எல்லா திசைகளில் இருந்தும் தரைவழியாகவும், தொடர் வண்டிகள் மூலமும் எளிதாகச் சென்றடையலாம். வேலூரில் உள்ள அப்துல்லாபுரம் விமான நிலையத்தின் வழியாக இம்மாவட்டம் பிற பகுதிகளுடன் வான் வழியாகவும் இணைக்கப்பட்டுள்ளது. இயற்கையாகவே காடுகளும், மலைத்தொடர்களும், குன்றுகளும் நிறைந்த பகுதியாக இம்மாவட்டம் திகழ்கின்றது.

# வேலூர் மாவட்டத்தின் தொல்பழங்காலம்

*[Pre-History of Vellore District]*

வரலாற்று அறிஞர்கள் ஒரு பகுதியின் வரலாற்றை எழுதும்பொழுது வரலாற்றுக்கு முந்திய காலம் [Prehistoric period] எனவும் வரலாற்றுக் காலம் [Historic period] என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கின்றனர். மனிதன் எழுதப் படிக்கத் தெரியாமல் இருந்த காலத்தை அவன் விட்டுச் சென்ற கல் ஆயுதங்கள், பிற பொருட்கள், பாறை ஓவியங்களின் துணையோடு எழுதுவது வரலாற்றுக்கு முந்தைய காலம் என்று அழைக்கப்படுகின்றது. மனிதன் எழுதப்படிக்கத் தெரிந்த காலம் முதல் அவனது எழுதுக்களையும், கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள், ஓலைச்சுவடிகள் முதலியவற்றின் துணையோடு வரலாறு எழுதப்படும் காலம் வரலாற்றுக் காலம் என அழைக்கப்படுகிறது. இவ்விரு கால கட்டங்களுக்கும் இடையில் வாழ்ந்த மனிதன் செம்பு, தங்கம், இரும்பு போன்ற உலோகங்களின் பயனை அறிந்தவனாகவும் சுட்ட செங்கற்களைக் கொண்டு வீடுகளையும் வாழ்விடத்தின் பகுதிகளையும் அமைத்துக் கொண்டதுடன் பெருங்கற்களைக் கொண்டு இறந்தவர்களுக்கு ஈமச்சின்னங்களை எழுப்பினார்கள், இக்கால மனிதர்கள் பானை ஓடுகளில் சில கீரல் எழுத்துகளைவிட்டுச் சென்றுள்ளனர். ஆயினும் அவற்றை இதுவரை நம்மால் படித்து பொருள் அறியமுடியாத நிலை உள்ளது. எனவே இக்கால கட்டத்தையும் தொல்பழங் காலத்திலேயே சேர்க்க வேண்டிய நிர்பந்தம் நமக்கு உள்ளது.

தொல்பழங்காலத்தை அக்கால மனிதன் கற்களைப் பயன்படுத்திய செயல்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு நான்கு வகையாக வகைப்படுத்தப்படுகிறது.

1. பழைய கற்காலம் [Palaeolithic Age]
2. நுண் கற்காலம் [Microlithic Age]
3. புதிய கற்காலம் [Neolithic Age]
   மற்றும்
4. பெருங்கற்காலம் [Megalithic Age]

**1. பழைய கற்காலம்** (சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது)

இக்காலத்தில் வாழ்ந்த மனிதன் நாடோடியாக வாழ்ந்தான் உணவைத் தேடி அங்கும் இங்கும் திரிந்து வாழ்ந்தான். பச்சை மாமிசம், காய், கனிகள் போன்றவற்றை உணவாக உட்கொண்டான் நெருப்பின் பயனை அவன் அறியாமல் வாழ்ந்தான். மிருகங்களின் தோலையும் இலைதழைகளையும் ஆடையாக அணிந்தான் தனக்குத் தேவையான உணவைப் பெற மிருகங்களை வேட்டையாடி வாழ்ந்தான். கரடுமுரடான கற்களைக் கூர்மையாக்கி மிருகங்களை வேட்டையாடி வாழ்ந்ததால் இக்காலம் பழைய கற்காலம் என அழைக்கப்பட்டது. பழைய கற்கால மனிதன் தமிழகத்தின் பகுதிகளிலும் வேலூர் மாவட்டத்தின் பகுதிகளிலும் வாழ்ந்தனர் என்பதை முதன்முதலில் கி.பி. 1863-ஆம் ஆண்டு இராபர்ட் புரூஸ்புட் என்னும் நிலவியல் ஆங்கில அறிஞர் கண்டுபிடித்தார். பழைய கற்கால மனிதன் வேலூர் மாவட்டத்தில் கொசத்தலையாற்றுப் (பழைய பாலாறு) படுக்கைப் பகுதிகளில் வாழ்ந்தான் என்பதையும் அவர் உறுதி செய்தார். இவ்விடத்தில் கொற்றலையாற்றின் பழைய வரலாற்றை நாம் அறிந்துகொள்வது சிறப்பாக அமையும்.

**கொற்றலையாற்றின் வரலாறு**

தற்போது வேலூர் மாவட்டம் வாலாஜாப்பேட்டைக்கு அருகில் பாலாற்றில் இருந்து பிரிந்து செல்லும் ஒரு சிறிய கால்வாயே இடையில் வரும் சிறுசிறு நீரோடைகளைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு வேலூர் மாவட்டம் அரக்கோணம் வட்டத்தில் கொசத்தலை ஆறாக உருப்பெறுகின்றது. பிறகு அது திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி, திருவள்ளூர், பொன்னேரி ஆகிய வட்டங்கள் வழியாகப் பாய்ந்தோடி சென்னை எண்ணூருக்கு அருகில் வங்காளவிரிகுடாக் கடலில் கலக்கிறது. இது பழைய பாலாறு (விருத்தக்ஷீரநதி) என்று அழைக்கப்படுகிறது.

தற்கால தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சியின் பயனாக செயற்கைக்கோள்கள் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களும் தொல்லியல் சான்றுகளும் முதலில் பாலாறு, கொசத்தலையாற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியில்தான் சுமார் 5,00,000 முதல் 2000 ஆண்டுகளுக்கு முன்னர்வரை பாலாறு ஓடியிருக்கலாம் எனத்

தெரிகின்றது. இன்றும் பனப்பாக்கம், திருமால்பூர் போன்ற பகுதிகளில் தொடர்ந்து நிலம் ஆற்றுப்போக்குள்ள மணற்பாங்காகக் காட்சியளிப்பதில் இருந்து இதை உறுதி செய்யலாம்.

கலிங்கத்துப் பரணி பாடிய செயங்கொண்டார் சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கருணாகரத் தொண்டைமான் வடக்கு நோக்கி காஞ்சிபுரத்தில் இருந்து படையுடன் புறப்பட்டபோது முதலில் படை பாலாற்றைக் கடந்து சென்றது என தமது பாடலில் குறிப்பிடுகின்றார். இக்கூற்றிலிருந்து பாலாறு சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன்புகூட பாலாறு காஞ்சிபுரத்தின் வடக்கே ஓடியிருக்கலாம் என அறிய முடிகின்றது. ஆனால் பாலாறு தற்பொழுது காஞ்சிபுரத்திற்குத் தெற்கே ஓடுகின்றது. அதேபோல் காவேரிப்பாக்கம் அருகில் உள்ள கொண்டாபுரம் கல்வெட்டுகள் அவ்வூர் ஈஸ்வரன் கோயிலுக்கு வடக்கே பாலாறு ஓடுகிறது என குறிப்பிடுகிறது. தற்போது இக்கோயிலுக்குத் தெற்கே பாலாறு பாய்ந்து ஓடுகிறது.

எனவே மேற்சொன்ன சான்றுகளிலிருந்து பாலாறு சுமார் 5 இலட்சம் ஆண்டுகளிலிருந்து 2000 ஆண்டுகளுக்குள் வாலாஜாபேட்டை அல்லது ஓச்சேரி பகுதியில் இருந்து வடகிழக்காக ஓடி பழவேற்காட்டிற்கு அருகே கடலில் கலந்திருக்கலாம் என்பதும் அதன் பிறகு பாலாறு தன்போக்கை சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு மாற்றிக் கொண்டு தற்போது உள்ள நிலையில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு வழியாக ஓடி சதுரங்கப்பட்டிணம் அருகே கடலில் கலக்கிறது என கணிக்க முடிகிறது. ஆனால் சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன்னர் காஞ்சிக்கு வடக்கே பாலாறு ஓடியதாக கலிங்கத்துப் பரணி குறிப்புக் காட்டுகின்றது. அதனால் அன்றைய நாளில் பாலாறு இரு பிரிவுகளாக ஓடி இருக்கலாம் எனவும் காஞ்சிக்கு வடக்கே ஓடிய பகுதி வறண்டு தெற்கே ஓடிய கிளை மட்டும் நிலைத்து நிற்கிறது என அறியலாம்.

இவ்வாறு கொசத்தலையாறு முதன்முதலில் வேலூர் மாவட்டத்தில்தான் தோன்றியது எனவும் இந்த ஆற்றுப்படுக்கையில் தான் பழைய கற்கால மனிதன் வாழ்ந்தான் என்பதையும் அறியமுடிகிறது. மேலும் வேலூர் மாவட்டத்தில் கீழ்கண்ட இடங்களில் பழைய கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டிருப்பதாலும் வேலூர்

மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே பழைய கற்கால மனிதன் வாழ்ந்ததை உறுதி செய்ய முடிகிறது.

1. அம்ரிஷபுரம்
2. ஆப்பூர்மலை
3. கணியனூர்
4. களத்தூர்
5. சிறுமாத்தூர்
6. சிறுவாஞ்சூர்
7. சென்னசமுத்திரம்
8. தக்கோலம்
9. திருக்கச்சூர்
10. திருமால்புரம்
11. நாகவேடு
12. நெமிலி
13. பாகவெளி
14. புலியமங்கலம்
15. மல்லாவரம்
16. முசிறி
17. மேட்டூர்
18. வளையாக்கரணை
19. வாணியன்சத்திரம்
20. விசகண்டி குப்பம்
21. அரக்கோணம்

முதலியனவாகும்.

# வேலூர் மாவட்டத்தில் புதிய கற்காலம்
## (கி.மு. 5000 முதல் கி.மு. 1000 வரை)

பழைய கற்கால மனிதர்கள் தாங்கள் பயன்படுத்தி வந்த கரடுமுரடான கற்கருவிகளையும், கற்கோடாரிகளையும் விடுத்து அவைகளைத் தாங்கள் எளிதாகக் கையாள்வதற்கு ஏற்ற வகையில் கல் ஆயுதங்களைக் கூர்மையாகவும் வழவழப்பாகவும் மாற்றி பயன்படுத்திய காலமே புதிய கற்காலம் எனப்பட்டது. இக்காலத்து மனிதன் வேலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்ததற்கான சான்றுகள் இன்றும் காணக்கிடக்கின்றன. அவைகளில் பையம்பள்ளி, அப்புக்கல்லு மற்றும் ஜவ்வாதுமலை மற்றும் அமிர்தி காட்டுப்பகுதிகளும் அடங்கும். வேலூர் மாவட்டத்தின் பையம்பள்ளி, அப்புக்கல்லு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளும், பைரவநாதமலை, ஜவ்வாதுமலை, புலிமேடு, எசையனூர் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட மேற்பரப்பாய்வுகளும் வேலூர் மாவட்டத்தின் புதிய கற்கால வரலாற்றை நன்கு அறிய உதவுகின்றன. குறிப்பாக பையம் பள்ளியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் புதிய கற்காலத்தின் இரண்டு காலகட்டங்கள் உள்ளதை தெரியப்படுத்தின. அவற்றுள் முதல் காலகட்டத்தில் வெளிர் சாம்பல் நிற மட்கலன்களும், எலும்புக் கருவிகளும், கற்கோடாரிகளும், சிறு கற்கருவிகளும், அம்மி கற்களும், குழவிக் கற்களும் கிடைத்தன. இக்கால கட்டத்தில் வாழ்ந்த மக்கள் வட்டம் மற்றும் நீள் வட்ட வடிவங்களில் பூமிக்கு அடியில் குழிகளை ஏற்படுத்தி அவற்றின் மேல் புல்லால் வேய்ந்த கூரைகளையும், தழை இலைகளைக் கொண்ட கூரைகளையும் அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். இவற்றின் தரைப்பகுதிகள் சரளைக் கற்களாலும், தட்டையான கற்களாலும் பாவப்பட்டு களிமண்ணாலும் கெட்டிப்படுத்தப்பட்டிருந்தது. குழியின் சுவர்ப்பகுதிகள் களி மண்ணால் பூசிமெழுகப்பட்டிருந்தது.

இரண்டாம் காலகட்டத்தில் வாழ்ந்த புதியகற்கால மனிதர்கள் சாம்பல் நிற மட்கலயங்களுடன் சிவப்புநிற மட்கலன்களையும்

பயன்படுத்தினர். இவைகள் கைகள் மற்றும் சக்கரத்தினால் செய்யப்பட்டவைகளாகும். கிண்ணங்களும், இரு பக்க கைக்கோடாரிகளும் கூட இக்காலத்தில் பயன்பாட்டில் இருந்தன.

புதிய கற்காலத்தை மனித வரலாற்றில் ஏற்பட்ட முதல் புரட்சிக் காலம்(Revolution) என்றால் அது மிகையன்று ஏனெனில் இக்காலத்தில்தான்

1. முதன்முதலில் மனிதன் நெருப்பின் பயனைக் கண்டறிந்து சமைத்த உணவுகளைச் சாப்பிடத் துவங்கினான். நெருப்பின் பயனை அறிந்தான்.
2. உணவுக்காகவும், தங்கும் இடத்திற்காகவும் அலைந்து திரிந்த நாடோடி வாழ்க்கையைவிட்டு ஓரிடத்தில் நிலையாக வாழ தலைப்பட்டனர்.
3. தனக்கு வேண்டிய உணவு வகைகளைத் தாங்களே பயிரிட்டுக் கொண்டனர். கொள்ளு, சாமை, வரகு முதலியன இவற்றில் அடங்கும்.
4. இக்காலகட்டத்தில்தான் பானைகள் செய்யும் முறை பழக்கத்திற்கு வந்தது.
5. புதிய கற்காலத்தின் இறுதி கட்டத்தில் மனிதனுக்கு முதன்முதலில் உலோகம் (செம்பு) அறிமுகமானது.
6. மிருகங்களை வளர்க்கத் தொடங்கினான்.
7. நெசவுத் தொழிலின் ஆரம்ப கட்டத்தை மனிதன் அறிந்தான்.
8. மணி வகைகளையும் முதலில் அறிந்தது இக்காலமே.
9. இறந்த மனிதர்களைப் புதைக்கும் பழக்கமும் ஏற்பட்டது புதிய கற்காலத்தில்தான்.
10. எல்லாவற்றிற்கும் மேலாக பிற்காலத்தில் மனிதவாழ்வில் பெரும் மாற்றங்களை உண்டாக்கிய சக்கரம் கண்டு பிடிக்கப்பட்டது புதிய கற்கால மனிதனால்தான்.

ஆகவே தான் இதனை புரட்சிக்காலம் என நாம் அழைக்கின்றோம்.

# வேலூர் மாவட்டத்தில் பெருங்கற்காலம்

*[Megalithic Age]*

**(கி.மு. 1000 முதல் கி.பி. 300 வரை)**

வேலூர் மாவட்டத்தில் பழைய கற்கால மனிதர்களையும், புதிய கற்கால மனிதர்களையும் தொடர்ந்து பெருங்கற்கால மனிதர்கள் வாழ்ந்தமைக்கான தடயங்கள் பெருங்கற் சின்னங்களாகவும், ஈமத்தாழிகளாகவும் வேலூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது. அவைகளில் பையம்பள்ளி, அப்புக்கல்லு, புலிமேடு, ஒடுக்கத்தூர், கரிவேடு, நத்தம், திருப்பத்தூர், பைரவநாத மலை, அரியூர், கர்வனூர். திருமணி, மலையாம்பட்டு, கல்லேரிமலை, ஊசூர், அம்மணாங்கோயில், அத்தணாவூர், கரிக்கந்தாங்கல், புதூர், வேப்பூர், ரங்க சமுத்திரம் ஆகியவை குறிப்பிடத் தக்கவைகளாகும். இவைகளே அன்றி மேலும் நூற்றுக்கணக்கான பெருங்கற்காலச் சின்னங்கள் இம்மாவட்டத்தில் நிறைந்து காணப்படுகின்றன.

பெருங்கற்கால மனிதர்கள் தாங்கள் வாழ்விடங்களுக்கு சற்றே தூரம் தள்ளி இறந்த மனிதர்களை அடக்கம் செய்யும் முறையைக் கையாண்டனர். இறந்த மனிதர்களுக்கு பெரிய பெரிய கற்களைக் கொண்டு கல்லறைகள் ஏற்படுத்தும் வழக்கம் இவர்களிடையே இருந்ததால் இது பெருங்கற்காலம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. தமிழகத்தில் இரும்பை முதன்முதலாக மனிதன் அறிந்து அதனைப் பெருமளவில் பயன்படுத்தியதால் இக்காலத்தை இரும்புக்காலம் என்றும் கூறுவர். தமிழகத்தில் சங்ககாலம் என்று பெருமையுடன் குறிப்பிடப்படும் காலமும் இதுவேயாகும். பெருங்கற்கால மனிதன் அமைத்த ஈமச்சின்னங்களை ஐந்து அல்லது ஆறு வகையாகப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**கல்வட்டம்(cairn circle)**

ஆழமாகக் குழிதோண்டி அதனுள் இறந்தவர்களுடைய உடலையோ அல்லது உடல் வைக்கப்பட்ட ஈமத்தாழி மற்றும் ஈமப்பேழைகளைப் புதைப்பவர் அதனுடன் மனிதர்கள் பயன்படுத்திய கத்திகள், அம்பு முனைகள், மணிகள், மட்கலயங்களையும் அடக்கம் செய்வார்கள். இவ்வாறு அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் தரைக்கு மேல் வட்ட, வட்டங்களாக கல்வட்டங்களை அமைப்பர். அவைகள் சிறியது முதல் பெரிய, பெரிய பாறைகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். சுமார் 25 மீட்டர் விட்டம் கொண்ட பெரிய கல்வட்டங்களாகக்கூட அமைப்பதுண்டு.

**குத்துக்கல்(Menhir)**

தரைக்குக் கீழே குழிதோண்டி இறந்தவர்களை அடக்கம் செய்துவிட்டு அதன்மேல் உயரமான கற்களை நட்டு வைப்பர் இம்முறைக்குக் குத்துக்கல் என்று பெயர்.

**கல்பதுக்கை(Dolmonoid cist)**

இம்முறையில் இறந்தவர்களை அடக்கம் செய்வது தரைமட்டத்திற்குமேல் அமையும். இயற்கையில் கிடைக்கும் பெரிய கற்களைக் கொண்டு நான்கு புறங்களிலும் சுவர்போல் அமைத்து ஒரு சதுரமான அல்லது நீள் சதுரமான அறை உண்டாக்கப்பட்டு அவைகளுக்கு இடையில் இறந்த உடல்களையும் ஏனைய இடுபொருட்களையும் வைத்துவிட்டு அதன் மேல் பகுதியை ஒரு பலகையான கல்லால் மூடிவிடுவர் சுற்றிலும் கற்களை சுவர்போல் அமைத்து விடுவர். இவ்வகை கல்பதுக்கைகள் பெரும்பாலும் சிறு குன்றுகள், மலைமுகடுகள் போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன. வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாதுமலைப் பகுதியில் இவ்வகை ஈமச்சான்றுகள் உள்ளன.

**கல்லறை(Slabed cist)**

தரையைச் சிறிதளவு தோண்டி நான்கு பெரிய அளவிலான பலகைக் கற்களை ஒன்றை ஒன்று தாங்கும் முறையில் நட்டுவைத்து ஒரு அறைபோல் வடிவமைத்து அதன் மத்தியில் ஈமப் பொருளையும் இடு

பொருட்களையும் வைத்து மேல் பகுதியை மற்றொரு பலகைக் கல்லைக் கொண்டு மூடி விடுவர். இவ்வகை பலகைக் கற்கள் ஒன்றை ஒன்று தாங்கும் முறை 'ஸ்வஸ்திகம்" போல் அமைக்கப்பட்டிருக்கும்.

### ஈமத்தாழிகள்(Urns)

இறந்த மனிதர்களின் உடல் அல்லது எலும்புகளை இடுபொருட்களுடன் சேர்த்து ஒரு பெரிய சுடுமண்ணால் செய்யப்பட்ட தாழியில் வைத்து பூமிக்கடியில் புதைத்து அதன் மேல்பாகத்தை ஒரு மூடிக்கல்லைக் கொண்டு மூடி விடுவர். இவ்வகையில் சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உடல்களும் ஒரே தாழியில் அடக்கம் செய்வது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வகைத் தாழிகளைத்தான் முதுமக்கள் தாழி என அழைப்பர்.

குறுகிய வாயும், சற்றே அகலமான தோள் பகுதியும் மூன்று அல்லது ஐந்து கால்களைக் கொண்ட சிறிய ஈமத்தாழியில் இறந்தவர்களின் உடலை எரித்த சாம்பலை இட்டுப்புதைத்த முறையும் கையாளப்பட்டது.

### ஈமப்பேழைகள்(Sarcophagus)

இவைகள் நீண்ட பெட்டிகளைப்போல் காட்சியுடையவை சுமார் 200 செ.மீ. நீளமும் 60 செ.மீ. அகலமும் கொண்டவைகள். இறந்த மனிதர்களைத் தன்னுள் அடக்கும் அளவு அறைகூட கொண்டவைகள். இப்பேழைகள் மேல்பகுதி மற்றும் கீழ்ப்பகுதி என இரண்டாகப் பிரிக்கும் வகையில் செய்யப்பட்டிருக்கும். கீழ்ப்பகுதி நான்கு முதல் 16 கால்கள் வரை தாங்கும் வகையில் அமைக்கப்பட்டு பெட்டிபோல் இருக்கும். அதனுள் இறந்தவர் உடலையும் இடுபொருட்களையும் வைத்து மேல்பகுதியைக் கொண்டு மூடி புதைத்துவிடுவர். மேல் பகுதி ஆட்டுக் கடாவின் தலை அல்லது எருமையின் தலைபோல் அழகுற செய்யப்பட்டிருக்கும். இவ்வகை ஈமப்பேழைகளை தற்காலக் கிருத்துவ மக்கள் இறந்தவர்களின் உடல்களைப் பெட்டிகளில் வைத்துப் புதைப்பதுடன் ஒப்பிடலாம்.

### பெருங்கற்கால மனிதனின் வாழ்க்கை

மனித வரலாற்றில் உலகம் முழுவதும் பெருங்கற்கால மனிதனின் வரலாறு ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளதால்

பெருங்கற்கால மனிதர்கள் வாழ்ந்த சுமார் 70 இடங்களில் தமிழகத்தில் அகழாய்வு செய்து பெருங்கற்கால மனிதனின் வாழ்க்கை முறைகள் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறான அகழாய்வுகளில் திருப்பத்தூர் வட்டம், பையம்பள்ளியில் செய்யப்பட்ட அகழாய்வு மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகும். அகழாய்வு செய்யப்பட்ட இடங்களில் இருந்து அக்கால மனிதர்கள் பயன்படுத்திய அழகிய மட்கலன்கள், இரும்பு ஆயுதங்கள், மணிகள் போன்றவைகள் கண்டறியப்பட்டன. இவர்கள் அமைத்த வீடுகளின் சுட்ட செங்கற்களும், கூரை ஓடுகளும், இரும்பு ஆணிகளும் பயன்படுத்திய கொள்ளு, வரகு, கேழ்வரகு, தினை போன்ற தானிய வகைகளும் கூட கண்டெடுக்கப்பட்டன. குழுவுக் கூட்டங்களாக வாழ்ந்திருக்கின்ற அம்மக்கள் தங்கள் கூட்டங்களுக்கென தனித்தனிக் குறியீடுகளைப் பயன்படுத்தினர். இறைவழிபாட்டில் தாய்த்தெய்வத்தை வணங்கும் முறையைக் கையாண்டு வாழ்ந்தனர். பசுக்களும், ஆடுமாடுகளுமே அவர்களின் முக்கிய சொத்தாக இருந்திருக்கின்றது. ஒரு கூட்டத்தின் கால்நடைகளை மற்றக் கூட்டத்தினர் கவர்ந்து செல்வதால் அவர்களுக்குள் அடிக்கடி சண்டைகளும் நிகழ்ந்துள்ளன.

# வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அகழாய்வுகள்

தமிழகத்தின் வரலாற்றையும், தொன்மையையும் சான்று களுடன் எழுதவும், ஆய்வு செய்யவும் தமிழகத்தில் இதுவரை சுமார் 125 இடங்களில் நடுவன் அரசு தொல்லியல் துறை. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை, தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகம், பண்பாடு மற்றும் கல்விக்கான சர்மா நிறுவனம், கேரளா பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்கள் மூலம் அகழாய்வுகள் செய்யப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டத்திலும் கீழ்கண்ட இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

**பையம்பள்ளி**

இவ்வூர் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் சென்னை–பெங்களூர் பெருவழிச் சாலையில் பர்கூர் என்னும் ஊருக்குக் கிழக்கே 5 கி.மீ. தொலைவிலும் நாட்ரம்பள்ளிக்கு மேற்கே சுமார் 8 கி.மீ. தொலைவிலும் பையம்பள்ளி அமைந்துள்ளது. இப்பகுதியில் கள ஆய்வுப்பணிகளை ஆங்கிலேயரான நிலவியல் அறிஞர் இராபர்ட் புரூஸ்புட் மேற்கொண்டு இப்பகுதியில் புதிய கற்கால மனிதன் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்தான் என்பதையும் அதற்குச் சான்றாகப் புதிய கற்காலக் கல் ஆயுதங்களையும் கண்டுபிடித்தார். தமிழகத்தின் திருவள்ளூர், பூண்டி பகுதியின் பழைய கற்கால மனிதர்கள் சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்தனர் என்ற உண்மையைக் கண்டறிந்து அறிவித்தவரும் இவரே ஆகும். இவரைத் தொடர்ந்து B.நரசிம்மையா, S.R.ராவ் மற்றும் பேராசிரியர் K.V.ராமன் ஆகியோரும் கள ஆய்வு செய்தனர். மலைகளும், குன்றுகளும் சூழ்ந்த இப்பகுதியில் கற்கால மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல்கள் காணப்படுகின்றன. பையம்பள்ளியில் இந்தியத்

தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் முனைவர் S.R. இராவ் தலைமையில் 1964-65 மற்றும் 1967-68-ஆம் ஆண்டுகளில் அகழாய்வுகளை மேற்கொண்டது. இவ்வகழாய்வு தமிழகத்தில் முதன்முதலாக அறிவியல் சார்ந்த முறையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வாகும்.

பையம்பள்ளியில் சேர்வராயன் மலையின் ஒரு பகுதியான தலதாப்பு மலை அடிவாரத்தின் அகழாய்வுப் பணிகள் நடைபெற்றது. மொத்தம் நான்கு அகழாய்வுக் குழிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டது. அவைகளில் இரண்டு இம்மலை அடிவாரத்திலும் இரு குழிகள் மலைச் சரிவின் மேல் பகுதியிலும் அகழாய்வு செய்யப்பட்டது. மலைச் சரிவின் மேல் தோண்டப்பட்ட அகழாய்வுக் குழிக்கு அருகில் ஒரு இயற்கையான குகைத்தளம் காணப்படுகின்றது. இவ்வகழாய்வுக் குழியில் புதிய கற்காலத்தைச் சேர்ந்த மண்ணடுக்கொன்று காணப்பட்டது. இக்குழியில் இருந்த கருங்கல் பாறையில் 1 மீ. நீளமும் 1 மீ.அகலமும் கொண்ட குழி ஒன்று குடையப்பட்டிருந்தது. இக்குழியில் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த கருப்பு-சிவப்பு மட்கலன்கள் கிடைத்தன.

பையம்பள்ளி அகழாய்வின்படி புதிய கற்காலம் இரண்டு உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. புதிய கற்காலத்தின் தொடக்க கட்டத்தில் (phase-I) வெளுப்பான சாம்பல் நிற மட்கலன்களும் மெருகூட்டப்பட்ட சாம்பல் நிற மட்கலன்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகழாய்வில் முதல் கால கட்டத்தைச் சேர்ந்த எலும்புக் கருவிகளும், பலவகையான கல் ஆயுதங்களும், கற்கோடாரிகளும் கிடைத்தன. தானியங்களை அரைக்கப் பயன்படுத்தப்படும் கல்லால் ஆன (Grinding stone) வீட்டு உபயோகப் பொருட்களும் இங்கு கண்டெடுக்கப்பட்டன.

இங்கு வாழ்ந்த மனிதன் வட்டமான அல்லது நீள் வட்டமான குழிகளை பூமிக்கு அடியில் வெட்டி (pit Dwellings)வாழ்விடம் அமைத்து வாழ்ந்துள்ளான். சில குழி வீடுகளை கற்களைப் பரவி தரை அமைத்துள்ளதுடன் அவைகளை இருகூறுகளாகவும் பிரித்துள்ளான். இக்குழிகளுக்கு ஓரமும் நடுவிலும் கம்பங்களை நட்டு அவற்றின் மேல் புல் மற்றும் தழைகளைக் கொண்டு கூரை அமைத்துள்ளான். அதற்குச் சான்றாக அகழாய்வில் குச்சி நடுகுழிகள் (post holes)காணப்பட்டன.

இனி இங்கு வாழ்ந்த புதிய கற்காலத்தின் இரண்டாம் கட்டத்தை (phare-II)பார்ப்போம். இக்காலகட்டத்தில் வாழ்ந்த மனிதன் பழுப்பு நிறமான மட்கலன்களைப் பயன்படுத்தியுள்ளான். இவற்றுடன் சாம்பல் நிற மட்கலன்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்காலத்தில் எலும்பிலான ஆயுதங்களின் பயன்பாடு குறைந்து கல் ஆயுதங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இக்கல் ஆயுதங்கள் பெரும்பாலும் இருபக்கமும் கூர்மைப்படுத்தப்பட்டிருந்தன. மட்கலன்கள் கைகளாலும், சக்கரத்தாலும் செய்யப்பட்டவைகளாகக் கிடைக்கின்றன. புதிய கற்காலத்தின் இரண்டாவது கட்டமனிதன் குடிசைகளில் வாழ்ந்திருக்கின்றான். குடிசையின் தரைப்பகுதி கற்களைக் கொண்டு அடுக்கி அதன்மேல் சாம்பலும், களிமண்ணும் கொண்டு மெழுகி இருந்தனர்.

இவ்வகழாய்வில் புதிய கற்காலக் கற்கருவிகள், எலும்பினாலான கூர் முனைகள், ஊசி முனைக் கருவிகள் சிறிய இருபக்கக் கற்கருவிகள் போன்றவைகளும், தானியங்களை அரைக்கவும் இடிக்கவும் பயன்படுத்தப்பட்ட கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் வாழ்ந்த புதிய கற்கால மனிதர்கள் வேளாண்மையை நன்கு அறிந்திருந்தனர். கொல்லு, பச்சைப்பயிறு ஆகியவற்றைப் பயிர் செய்தனர். ஆடு, மாடு, பன்றி, மான், காட்டுப்பூனை போன்றவற்றை வளர்த்தனர்.

**பெருங்கற்காலம்**

பையம்பள்ளி பகுதியில் புதிய கற்காலத்தைத் தொடர்ந்து தொடர்ச்சியாக பெருங்கற்கால மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். அகழாய்வுக் குழிகளில் பெருங்கற்கால மக்களின் பண்பாட்டு மண்ணடுக்குகள் (Layar thickness)1.மீட்டரிலிருந்து 1.5 மீட்டர் தடிமத்துடன் காணப்பட்டது. இரும்புகால மனிதன் வட்ட வடிவ வீடுகளில் வாழ்ந்துள்ளனர். இவ்வகையான வீடுகள் 1.5 மீட்டர் முதல் 3 மீட்டர் வரை விட்டம் கொண்டவைகளாக இருந்தன. நீள்வட்ட வடிவம் கொண்ட ஒரு வீடு 1.47 மீட்டரில் இருந்து 4 மீட்டர் அளவு விட்டங்களைக் கொண்டிருந்தன. வீடுகள் தரைக் கற்களால் பாவப்பட்டிருந்தன.

பெருங்கற்கால மக்கள் கறுப்பு சிவப்பு, சிவப்பு, கறுப்பு நிறங்களைக் கொண்ட மட்கலன்களைப் பயன்படுத்தி உள்ளனர். மூடிகள், தாங்கிகள், மூன்று கால்களை உடைய ஜாடிகள், தானியங்களை சேமிக்கப் பயன்படுத்திய ஜாடிகளும் பையம்பள்ளி அகழாய்வில் கிடைத்தன. பானைகளின் மீது அலங்கார வேலைப்பாடுகள் காணப்பட்டன. சிவப்பு மட்கலன்கள் மீது வண்ணங்கள் தீட்டப்பட்டிருந்தது பையம்பள்ளி மட்கலன்களின் சிறப்பான ஒன்றாகும். சுடுமண்ணாலான கூம்பு வடிவப் பொருட்கள் பல பையம்பள்ளி அகழாய்வில் கிடைத்தன. இவைகள் சடங்குகளுக்குப் பயன்படுத்தியவைகளாக இருக்கலாம்.

சுடுமண் உருவங்களும் அரியவகைக் கல் மணிகளும், காதணிகளும், சுடுமண்ணாலான விளக்குகளும், சங்கு வளையல்களும் இவ்வகழாய்வில் கிடைத்துள்ளன. கல்லால் செய்யப்பட்ட•வார்ப்படக் குப்பி (mould) ஒன்று இவ்வகழாய்வில் கிடைத்துள்ளதைக் கொண்டு இங்கு வாழ்ந்த மக்கள் தங்கத்தை உருக்கும் முறையை அறிந்துள்ளனர் என நம்மால் அறிய முடிகிறது.

பையம்பள்ளி அகழாய்வில் கிடைத்த ஈமச்சின்னங்கள் கல்வட்ட (cairain circle) வகையைச் சார்ந்தவை. புதைக்கப்பட்ட மனிதனுடன் ஈமப் பொருட்களாக மட்கலன்களும், இரும்புப் பொருட்களும் சுடுமண் மணிகளும் காணப்பட்டன. மற்றும் ஓரிடத்தில் இருபத்து நான்கு கால்களை உடைய ஈமப்பேழை ஒன்று இடு பொருட்களுடன் காணப்பட்டது.

பையம்பள்ளி அகழாய்வு புதியகற்கால மற்றும் இரும்பு கால (பெருங்கற்கால) மனிதனின் வாழ்க்கையையும் பண்பாடுகளையும் அறியப் பெரிதும் உதவிபுரிகின்றது. மேலும் இவ்வகழாய்வு மூலம் தான் இரும்பு காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் உள்ள இடைவெளியைச் சரியாகக் கணிக்க முடிந்தது. இதே போன்ற பண்பாடு கருநாடகத்தின் ஹள்ளூர் என்ற இடத்திலும் காணப்பட்டது. தமிழ்நாட்டின் புதிய கற்காலப் பண்பாட்டை அறிய பையம்பள்ளி அகழாய்வு சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும்.

## அப்புக்கல்லு அகழாய்வு

அப்புக்கல்லு வேலூர் மாவட்டம், வேலூர் வட்டத்தில் வேலூரில் இருந்து தென்மேற்கே 22கி.மீ தொலைவில் உள்ள ஓர் சிற்றூராகும். இவ்வூரைச் சுற்றி சிறியதும் பெரியதுமான பல குன்றுகள் சூழ்ந்துள்ளன. இவ்வூரில் வரலாற்றுக்காலச் சான்றுகள் அதிகமாக காணப்படவில்லை எனினும் இங்கு புதிய கற்கால மற்றும் பெருங்கற்காலச் சான்றுகள் நிறைந்து காணப்படுகின்றது. இப்பகுதியை சென்னைப் பல்கலைக் கழக பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறைப் (Department of Ancient History and Archaeology) பேராசிரியர்கள் கள ஆய்வுசெய்து பெருங்கற்காலத்தைச் சேர்ந்த கருப்புசிவப்புப் பானை ஓடுகளைச் சேகரித்தனர். இங்குள்ள மலை அடிவாரத்தில் சாம்பல்மேடு (Ash mound) ஒன்று உள்ளது. இங்கு புதியகற்கால மற்றும் பெருங்கற்கால மனிதன் வாழ்ந்திருக்கக் கூடும் என உறுதி செய்தனர். எனவே அப்பகுதியின் தொன்மையையும் பண்பாட்டையும் அறிய சென்னை பல்கலைக் கழகத்தின் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறையின் பேராசிரியர்கள், பேராசிரியர் முனைவர் K.V.இராமன் அவர்களின் தலைமையில் 1977 மற்றும் 1979–ஆம் ஆண்டுகளில் அகழாய்வு மேற்கொண்டனர். இவ்வூரின் அகழாய்வுக் குழிகள் ஏறத்தாழ 4.5 மீட்டர் ஆழமும் 15 மண் அடுக்குகளைக் கொண்டதாகவும் காணப்பட்டது. இம்மண் அடுக்குகளைக் கொண்டு இங்கு இருந்த நாகரீகம் மூன்று பண்பாட்டுப் பிரிவுகளைக் கொண்டது என முடிவு செய்தனர்.

### முதல் பண்பாட்டுக் காலம்

அப்புக்கல்லு அகழாய்வு காட்டும் முதற் பண்பாட்டுக் காலத்தில் (இரும்பு காலத்தை - பெருங்கற்காலம்) மக்கள் வாழ்ந்தனர். இக்காலத்தைச் சேர்ந்த தொல்பொருட்களாக இரும்பால் செய்யப்பட்ட அம்பு முனைகள், கத்திகளின் சிதைந்த பகுதிகள், சுடுமண் மணிகள், கல் மணிகள், சங்கு வளையல்கள், கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் முதலியன கிடைத்தன. கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் நன்கு வழவழப்பாக்கப்பட்டு நேர்த்தியான பிசைந்த களிமண்ணால் செய்யப்பட்டவைகளாகக் கண்டெடுக்கப்பட்டது. முதல் பண்பாட்டின் கடைசி மண் அடுக்குகளில் சில முற்றுபெறாத நிலையிலான புதிய கற்காலக் கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன. இவ் அகழாய்வில் கிடைத்த

கரித்துண்டுகளை கரிமம் 14 முறைப்படி ஆய்வு செய்த பொழுது இவ்வூரின் இரும்புக் காலப் பண்பாடு கி.மு. 400 முதல் கி.பி. 300 வரை நிலவியது என அறியமுடிந்தது.

## இரண்டாவது பண்பாட்டுக் காலம்

இரும்பு காலத்தை அடுத்து வரலாற்றில் தொடக்கக் கால மனிதர்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். இக்காலத்தைச் சார்ந்த சுடுமண் பொம்மைகள், சங்கு வளையல்கள், அரிய வகைக் கல்மணிகள், காவிநிறப்பானை ஓடுகளும், சிவப்பு நிறப் பானை ஓடுகளும், கருப்பு சிவப்பு மட்கலப் பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. இக்கால மனிதன் குடிசை வீடுகளில் வாழ்ந்தமைக் காண தடயங்களும், தரைகளும் காணப்பட்டது. இப்பண்பாட்டுக் காலம் கி.பி. 300 முதல் கி.பி 900 வரை என வரையறை செய்யலாம்.

## மூன்றாவது பண்பாட்டுக் காலம்

மூன்றாவது பண்பாட்டுக் காலத்தைச் சேர்ந்த மண்அடுக்குகளில் இருந்து தடிமமான சிவப்பு நிற மட்கல ஓடுகள் (coarse Red ware) நிறைய கிடைத்தன மேலும் இக்காலத்தைச் சேர்ந்த தொல்பொருட்களாக கண்ணாடி வளையல்கள், அரிய வகைக் கல்மணிகள், பிற மணிகள், சுடுமண் பொம்மைகள், இரும்பால் செய்யப்பட்ட அரிவாள்கள், கத்திகள் ஆகியவைகளும் சேகரிக்கப்பட்டுள்ளது. இம்மக்கள் குடிசை வீடுகளில் வாழ்ந்துள்ளனர். இக்காலம் வரலாற்றின் பிந்தைய காலமாகும். இப்பண்பாடு கி.பி. 900 முதல் கி.பி. 1600 வரை நிலவியது என கணக்கிடப்பட்டது.

மூன்றாவது பண்பாட்டுக் காலத்தைச் சேர்ந்த சுடுமண் விளக்குகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட ஆண் உருவத்தின் தலைப்பகுதி, பெண்ணின் தலைப்பகுதி, காதணிகள், வட்டச் சில்லுகள், விளையாட்டுப் பொருட்கள், மாவரைக்கும் கல், அரியவகைக் கல்மணிகள், இரும்பால் செய்யப்பட்ட கைக்கோடாரி ஆகிய தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக நோக்கின் அப்புக்கல் அகழாய்வு இங்கு மனிதன் பெருங்கற்காலம் முதல் கி.பி. 1600 வரை தொடர்ச்சியாக வாழ்ந்தான் என்பதற்காண ஆதாரத் தரவுகளைத் தந்துள்ளது.

# ஓடுகத்தூர் அகழாய்வுகள்

வேலூர் மாவட்டம் வேலூர் வட்டத்தில் ஒடுகத்தூர் அமைந்துள்ளது. இவ்வூர் வேலூருக்கு தென்மேற்கே சுமார் 30 கி.மீ. தூரத்தில் உள்ளது. இவ்வூர் ஒருபுறம் மலைக்குன்றுகளும் மறுபுறம் பாலாற்றின் துணையாறு ஒன்றும் சூழ்ந்த அழகிய சிற்றூராகும். இங்கு ஓடும் ஆற்றின் தென்கரையில் மடையப்பட்டு என்ற குக்கிராமம் உள்ளது. இந்த ஊரை ஒட்டி சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த ஈமச் சின்னங்கள் பரந்து கிடக்கின்றன.

இப்பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் மூன்று 1916-ம் ஆண்டு ரிச்சர்ட் மற்றும் டி.என். ஹியர்சே ஆகிய இரு ஆங்கிலேயர்களால் அகழாய்வு செய்யப்பட்டது. அவற்றுள் ஒரு ஈமக்குழியின் மீது காணப்பட்ட கல்வட்டத்தின் விட்டம் 43 அடியாகும். இப்பெரிய ஈமச்சின்னத்தை அகழாய்வு செய்த பொழுது பெரிய கற்பலகை ஒன்று மூடிக்கல்லாக அமைக்கப்பட்டிருந்தது. மூடிக்கல் அகற்றப்பட்டு ஈமக்குழி அகழாய்வு செய்யப்பட்டது.

இரண்டாவது ஈமச் சின்னத்தின் விட்டம் சுமார் 56 அடியாகும். இதுவும் ஒரு கற்பதுக்கைச் சின்னமாகும். இக்கல்லறை 5 அடி ஆழத்தில் காணப்பட்டது. கிழக்குப் பக்கம் இருந்த பலகைக் கல்லில் இடுதுளை காணப்பட்டது.

முன்றாவது கல்லறையின் மீதிருந்த கல்வட்டம் 34 அடி விட்டம் கொண்டது. செவ்வக வடிவிலான இக்குழியின் தரைப் பகுதியின் மேல் மூடிக் கல்லும் அதன் அடியில் ஈமக்குழியும் அகழ்ந்தெடுக்கப்பட்டது.

ஒடுகத்தூர் அகழாய்வில் நீண்ட கழுத்தினையுடைய சிறிய மட்கலன்களும், ஜாடிகளும், கூம்பு வடிவ மட்கலயங்களும், கருப்பு சிவப்புப் பானை ஓடுகளும் கிடைத்தன. மேலும் ஒடுக்கத்தூர் அகழாய்வில் பல இரும்புப் பொருட்கள் கிடைத்தன. அவைகள் நீண்ட கத்திகள், குறுவாள்கள், இரும்புக் கோடாரிகள், சிறிய கத்திகள், வில் மற்றும் அம்பு முனைகளும் குறிப்பிடத்தக்கவைகளாகும். இவைகளுடன் கல் மணிகள், சங்கு வளையல்கள், புதிய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகளான தேய்ப்பான் மற்றும் அரைக்கும் கல் (Grinding stone) போன்றவைகளும் கிடைத்துள்ளன.

# மலையாம்பட்டு அகழாய்வு

மலையாம்பட்டு கிராமம் வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தில் அமைந்துள்ளது. உமராபாததில் இருந்து வாணியம்பாடி செல்லும் சாலையில் மணியார் கும்பம் என்ற இணைப்புச் சாலையில் இருந்து மேற்கே சுமார் 7 கி.மீ. தூரத்தில் மேல்மலையாம்பட்டு மலைப்பகுதி உள்ளது. இங்குள்ள ஆர்மாமலை வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். இம்மலையின் அடிவாரத்தில் பெருங்கற்சின்னங்களின் எச்சங்களும். கருப்பு சிவப்புப் பானை ஓடுகளும் அதிக அளவில் காணப்படுகின்றன. ஆர்மாமலையின் தென்பகுதியில் அமைந்துள்ள பெரிய குகையின் உட்புறத்தில் பாறையில் பல்லவர் காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்ஓவியங்களும் அங்குள்ள சில உடைந்த சிற்பங்களும் அவ்விடத்தின் சமணம் இருந்ததற்கான ஆதாரங்களாக உள்ளன. இவ் ஓவியங்களையும் அங்குள்ள செங்கல்லில் கட்டப்பட்டுள்ள கட்டிடப் பகுதிகளையும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அறிவிக்கப்பட்ட தொல்லியல் சின்னமாகப் பாதுகாத்து வருகின்றது.

ஆர்மா மலையில் காணப்படும் ஓவியங்களுக்கும் மலையின் அடிவாரத்தில் காணப்படும் பெருங்கற்கால ஈமச்சின்னங்களுக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா? என்பதை அறியும் பொருட்டு 1970-71-ஆம் ஆண்டுகளில் இந்தியத் தொல்லியல் துறையின் வல்லுநரான திரு. K.V.சௌந்தர்ராசன் அவர்களது தலைமையில் அகழாய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டது. சுமார் 2 மீட்டர் உயரமுடைய மண் அடுக்குகளில் பெருங்கற்காலம் மற்றும் வரலாற்றின் தொடக்க காலத்தைச் சேர்ந்த எச்சங்கள் காணப்பட்டது.

மண் அடுக்கின் கீழ்ப்பகுதிகளில் பெருங்கற் காலத்தைச் சேர்ந்த கையினாலும், சக்கரத்தாலும் செய்யப்பட்ட கருப்பு, சிவப்பு மட்கலன்களும், மெருகேற்றப்பட்ட மட்கலன்களும் கிடைத்தன. புதிய கற்காலத்தைச் சார்ந்த சில மட்கல ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டது. இங்கு வாழ்ந்த பெருங்கற் காலத்தின் கால அளவு கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை என காலம் நிர்ணயிக்கப்பட்டது.

இப்பகுதியில் வாழ்ந்த வரலாற்றின் தொடக்கக் கால மனிதர்களின் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை என கால வரையறை செய்யப்பட்டது. இக்காலத்தைச் சார்ந்த மண் அடுக்குகளில் இருந்து காவி வண்ணம் பூசப்பட்ட மட்கலன்களும், பழுப்பு நிறமட்கலன்களும் கிடைத்தன. பழுப்பு நிற மட்கலன்களின் ஜாடிகள் முக்கியமான வகையாகும். சில இரும்புப் பொருட்களும் இரும்பின் எச்சங்கள் (Iron slags) கிடைத்துள்ளன.

இதுவரை வேலூர் மாவட்டத்தில் மேற்குப் பகுதியில் மலைகள் மற்றும் குன்றுகள் நிறைந்தப் பகுதிகளிலேயே அகழாய்வுகள் நடைபெற்றுள்ளதை பார்த்தோம். அவ்வகழாய்வுகளில் இருந்து வேலூர் மாவட்டத்தின் மனிதன் புதிய கற்காலக் காலம் முதல் (கி.மு. 5000) வாழ்ந்திருக்கின்றான் என்பதை உறுதி செய்ய முடிகிறது. ஆயினும் சில அண்மைக்கால மேற்பரப்பாய்வுகள் வேலூர் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் கொசத்தலையார் ஆற்றை ஒட்டி அரக்கோணம் பகுதியில் பழைய கற்காலத்திலேயே (சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு) மனிதன் வாழ்ந்திருக்கக் கூடும் என்பதை உறுதி செய்துள்ளன.

## கல்லேரிமலை அகழாய்வுகள்

கல்லேரிமலை வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் இராசாக்கல் என்ற சிற்றூருக்கு அருகில் அமைந்துள்ளது. ஆம்பூருக்கு அருகில் உள்ள இந்த ஊர் ஆம்பூரில் இருந்து குடியாத்தம் செல்லும் சாலையில் மேல்பட்டிக்கு அருகிலும் உள்ளது. இந்த ஊரின் வடக்குப்புறத்தில் பாலாறும் மேற்குப் பகுதியில் பாலாற்றின் துணை ஆறான மலட்டாறும் ஓடுகின்றன. இராசாக்கல் கிராமத்தில் ஏராளமான புதிய கற்களும் மற்றும் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த தொல்லியல் தரவுகளும் ஏராளமாக காணப்படுகின்றன. இங்கு காணப்படும் நடுகல் ஒன்று இவ்வூரினை இராசகிரிப் பட்டினம் என குறிப்பிடுகின்றது.

இவ்வூரின் தொன்மை நிலையினை அறியும் பொருட்டு 1978-79-ஆம் ஆண்டுகளில் இங்கு சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல்துறையால் முனைவர் பேராசிரியர் கே.வி. இராமன் தலைமையில் அகழாய்வு செய்யப்பட்டது. மொத்தம் நான்கு அகழாய்வுக்

குழிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டது. அந்நான்கு குழிகளும் மிகவும் ஆழம் குறைவாகவே காணப்பட்டது. மொத்தத்தில் இங்கு புதிய கற்காலம் மற்றும் இரும்புக் காலப் பண்பாட்டு எச்சங்கள் பெரிய அளவில் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வகழ்வாய்வில் குறைந்த வகையிலான மட்கலன்கள், மணிகள், விளக்குகள் போன்ற தொல்பொருட்களே கிடைத்தன. ஆயினும் இங்கு கிடைத்த ஈமத்தாழிகள் சிறப்பானவைகளாகும். ஏனெனில் புதிய கற்காலத்துப் பண்பாட்டுக் கூறான ஈமத்தாழிகள் இங்கு கிடைத்திருப்பது புதிய கற்காலத்தின் இறுதிக்காலம் அல்லது புதிய கற்காலம் மற்றும் பெருங்கற்காலம் ஆகியவற்றின் இடைக்காலத்தினை (Transition period) இப்பகுதி பெற்றிருந்ததை அறிய உதவுகின்றன.

## வேலூர் மாவட்டத் தொல்லியல் சின்னங்கள்

பொதுவாகத் தொல்லியல் சின்னங்கள் தொல்லியல் அறிஞர்களால் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது. ஓர் தொன்மையான இடம் கட்டிடம், கோயில் அல்லது கல்வெட்டு உலக வரலாற்றுடனும் உலக மக்கள் அனைவரும் வந்து காணக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டால் அக்கட்டிடம் அல்லது கோயில் உலகத் தொல்லியல் சின்னமாக (International Heritage Monument)என கருதப்படும் தமிழகத்தில் மாமன்னன் ராசராசனால் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரத்தில் அவன் மகனான முதலாம் இராசேந்திரன் கட்டிய கங்கைகொண்ட சோழபுரம் கோயில் மற்றும் மூன்றாம் இராசராசன் கட்டிய தாராசுரம் கோயிலும் மாமல்லபுரச் சிற்பங்களும் இவ்வகையைச் சார்ந்ததாகும். இக்கோயில்களின் கட்டிட அமைப்புகளும், சிற்பங்களும் உலகப் புகழ்பெற்றவைகளாகும்.

அடுத்து (National Heritage monument) எனப்படுபவை களாம். ஒரு நாட்டு வரலாற்றை எழுதுவதற்கு, வரலாற்றுச் சான்றுகளாக இருப்பவைகளாகும். மேற்குறிப்பிட்ட இருவகையான தொல்லியல் சின்னங்களையும் இந்தியாவில் இந்தியத் தொல்லியல்துறை (Archaeological Suervay of India) பாதுகாத்து வருகின்றது.

தமிழகத்தில் வேலூர் கோட்டை, சித்தன்னவாசல் ஓவியங்கள், ஆர்க்காட்டில் உள்ள டெல்லிகேட், செஞ்சிக் கோட்டை முதலியன குறிப்பிடத்தக்கவைகளாகும். இவைகளேயன்றி தமிழகத்தில் சற்று ஏறத்தாழ 400 தொல்லியல் சின்னங்கள் இந்தியத் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்படுகின்றன.

ஒரு கட்டிடமோ, கோயிலோ, கல்வெட்டோ, இடமோ ஒரு மாநிலத்தின் வரலாற்றை எழுதவும், மாநில அளவில் முக்கியத்துவம் பெற்றதாகவும் கருதப்படுமானால் அது மாநிலத் தொல்லியல் சின்னம் (State monument) என கருதப்படுகின்றது. இவ்வாறான தொல்லியல் சின்னங்கள் தமிழகத்தில் மொத்தம் 88 உள்ளன. அவைகளைத் தமிழகத் தொல்லியல் துறை பாதுகாத்து வருகின்றது. மதுரையில் உள்ள திருமலை மன்னர் அரண்மனை, தஞ்சை அரண்மனை,இராமநாதபுரத்தில் உள்ள சேதபதிகள் அரண்மனை வெட்டுவான் கோயில், கூழம்பந்தல் கங்கைகொண்ட சோழீஸ்வரர் கோயில், காஞ்சிபுரம், சந்திரபிரபா கோயில், ஆரணி பூண்டி அருகர் கோயில் முதலியன குறிப்பிடத்தக்கவைகளாகும்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் வேலூர் மாவட்டத்தில்

1. கண்டி மன்னர் கல்லறை – வேலூர்
2. ஆர்மாமலை குகை ஓவியம் – மேல் மலையாம்பட்டு
3. ஏழு கன்னியர் சிலைகள் – பெருங்காஞ்சி
4. வாலீஸ்வரர் கோயில் – அரக்கோணம்
5. கஞ்சா சாகிப் கல்லறை – சோளிங்கர்

ஆகியவை தொல்லியல் சின்னங்களாக அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வருகின்றன. இவைகள் தவிர நடுவண் அரசு தொல்லியல் துறையால் வேலூர் மாவட்டத்தில் சுமார் 20 தொல்லியல் சின்னங்கள் அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அவற்றுள்

1. கோட்டை – வேலூர்
2. ஜலகண்டேசுவரர் கோயில் – வேலூர்
3. கோட்டை மசூதி – வேலூர்
4. சோமநாதர் கோயில் – மேல்பாடி
5. அரிஞ்சய சோழீஸ்வரர் கோயில் – மேல்பாடி
6. சமணச் சிற்பங்கள் மற்றும் கல்வெட்டுகள் – வள்ளிமலை
7. சுப்பிரமணியசுவாமி கோயில் - வள்ளிமலை

8. அரங்கநாதர் கோயில் – எருக்கம்பட்டு
9. டெல்லிகேட் – ஆர்க்காடு
10. பீரங்கி – ஆர்க்காடு
11. மசூதியும் குளங்களும் – ஆர்க்காடு
12. மசூதி அருகில் உள்ள கட்டடங்கள் – ஆர்க்காடு
13. கொத்தளப்பகுதி – முப்பதுவெட்டி
14. சமணக் குகையும் சிற்பங்களும் – விளாப்பாக்கம்
15. கல்வெட்டு – சோளிங்கர்
16. நினைவுச் சின்னங்களும் 5 வரலாற்றுக்கு முற்பட்ட இடங்களும் அடங்கும்.

## கண்டி மன்னன் கல்லறை

இலங்கையில் கடைசியாக ஆட்சி செய்த தமிழ் மன்னனான விக்ரம ராஜசிங்க மன்னனின் கல்லறை கண்டி மன்னன் கல்லறை என அழைக்கப்படுகிறது. இந்நினைவுச் சின்னம் வேலூரில் உள்ள பாலாற்றங்கரையில் புதிய பேருந்து நிலையத்திற்கு மேற்கே சுமார் 150 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது . அது தற்பொழுது மக்களால் முத்து மண்டபம் என அழைக்கப்படுகிறது.

இலங்கையின் கண்டியை ஆட்சி செய்த ராஜாதிராசனுக்கு வாரிசில்லாமல் போகவே அவருக்குப்பின் அவரது மனைவியின் தம்பியான கண்ணுசாமி தமது 18வது வயதில் விக்கிரம ராஜசிங்கன் என்ற பட்டப் பெயருடன் கண்டி மன்னராக்கப்பட்டார். இந்நிகழ்வுகளை பின்திரையில் இருந்து இயக்கியவர் அந்நாட்டு முதன்மந்திரியான பிலிமைத் தளவாய் ஆகும். தமிழகத்தின், புதுக்கோட்டை மாவட்டம் பூலாம்பட்டியில் இருந்து கண்டிக்கு அழைக்கப்பட்ட சகோதரர்களான முத்துச்சாமியும் அவன் தம்பி கண்ணுசாமியும் தனது கட்டுப்பாட்டில் இருப்பான் என நினைத்து கண்ணுசாமிக்குப் பட்டம் கட்டப்பட்டது. கண்ணுசாமி முதலமைச்சர் பிலிமைத்தளவாயுடன் ஒத்துப்போகாது போகவே முத்துசாமியை மன்னராக்கத் திட்டமிட்டான் அதற்காக ஆங்கிலேயரின் துணையையும் நாடினான். ஆயினும் விக்கிரமசிங்கன் எதிரிகளை நேர் கொண்டு அமைதியை நிலைநாட்டினான் ஆனாலும் நாடு பிடிக்கும் ஆசை கொண்ட ஆங்கிலேயர் மன்னனை விடுவதாக

இல்லை. முதலில் மன்னருக்கு இனக்கமாக இருந்த டச்சுக்காரர்களை அங்கிருந்து வெளியேற்றியதுடன் பிலிமைத் தளவாயையும், முத்துசாமியையும் ஆசை வார்த்தைகள் காட்டி தம் வழிக்குக் கொண்டு வந்தனர். இலங்கையின் கடற்கரைப் பகுதியில் பாக்கு வணிகர்களைத் தாக்கி அவர்களின் பாக்கு முட்டைகளைப் பறிமுதல் செய்தார் என காரணம் கூறி விக்கரமசிங்கன் மீது ஆங்கிலேயரும், முத்துசாமியும், பிள்ளைத் தளவாயும் சேர்ந்து போர் தொடுத்தனர். விக்கிரமராஜசிங்கன் 26 ஆண்டுகள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டான் ஆயினும் இறுதியில் பரங்கியர் படை வென்றதால் மன்னனும் அவனது குடும்பத்தினரும் அரண்மனையைவிட்டு வெளியேறியும் அவர்களை ஆங்கிலேயர் சிறைபிடித்து கண்டியில் இருந்தால் மன்னருக்கு மக்களின் ஆதரவு பெருகும் என பயந்து மன்னரையும் அவரது குடும்பத்தினரையும் வேலூருக்கு நாடு கடத்தி 8-3-1816 முதல் வேலூர் கோட்டையில் அவர்களைச் சிறைவைத்தனர். 16 ஆண்டுகால சிறைவாசத்திற்குப் பிறகு விக்கிரமசிங்கராசா 31-1-1832-ல் மரணம் எய்தினார். அவரது உடல் வேலூர் பாலாற்றங்கரையில் புதைக்கப்பட்டது. அவருக்கு அருகிலேயே அவரது உறவினர்களின் உடல்களும் அடக்கம் செய்யப்பட்டது. இதுவே கண்டி மன்னர் கல்லறையாகும்.

இலங்கையை ஆட்சி செய்த கடைசி தமிழ் மன்னனின் கல்லறையை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நினைவுச் சின்னமாக அறிவித்து பாதுகாத்து வருகின்றது. விக்கிரமராஜ சிங்கனின் புகழையும் பெருமையையும் நிலைநாட்ட அவர்களின் கல்லறைகள் மீது தமிழ்நாடு அரசு சார்பில் ரூபாய் 7 லட்சம் செலவில் முத்து மண்டபம் கட்டப்பட்டது. இதனை 1-7-1990 அன்று **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## கஞ்சா சாகிப் கல்லறை – சோளிங்கர்

வாலாசா வட்டம் சோளிங்கர் பேரூந்து நிலையத்திற்கு எதிரே முக்கிய சாலையின் ஓரத்தில் இச்சின்னம் அமைந்துள்ளது. 15 அகலமும் 35 அடி நீளமும் கொண்ட இக்கல்லறை கஞ்சா சாகிப் கல்லறை என

அழைக்கப்படுகின்றது. இச்சின்னம் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்படும் சின்னங்களில் ஒன்றாகும். இக்கட்டிடம் சுதையாலும் செங்கற்கலாலும் கட்டப்பட்டதாகும். கி.பி. 1781-ஆம் ஆண்டு ஆங்கிலப்படைகளுக்கும் திப்புசுல்தான் படைகளுக்கும் இடையில் சோளிங்கரில் நடந்த போரின் பொழுது திப்புசுல்தான் படையின் சார்பில் போரிட்டு மரணமடைந்த படை வீரர்களின் உடல்கள் மொத்தமாக இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளது. (ஒரு பெரிய குழி வெட்டி அதில் மொத்தமாக வீர மரணமடைந்த வீரர்களின் உடல்கள் மண்ணில் மூடப்பட்டது என நம்பப்படுகின்றது.) இதனை அறிய இதன் நுழைவாயின் மேல் உள்ள ஆங்கிலக் கல்வெட்டு ஒன்று தெளிவாக்குகின்றது.

அக்கல்வெட்டு பின்வருமாறு உள்ளது :

This tomb which is belived to mark the spot
where the bodies of the
Slain of the Mysore Army were intepred
is conserved by the Government of India
to commemorate the Battle of sholinghur1781

## ஏழு கன்னியர் சிலைகள் – பெருங்காஞ்சி

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வரும் தொல்லியல் சின்னங்களில் பெருங்காஞ்சி ஏழு கன்னியர் சிலைகளும் ஒன்றாகும். இந்நினைவுச் சின்னம் வாலாசாவில் இருந்து சோளிங்கர் செல்லும் சாலையில் உள்ள பெருங்காஞ்சி என்ற கிராமத்தின் கிழக்கில் அமைந்துள்ளது. பல்லவர் காலத்தில் செதுக்கப்பட்ட இச்சிலைகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவைகளாகும். பல்லவர்களின் கலைப்பாணிக்கு இச்சிலைகள் ஓர் நல்ல எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.

ஏழு கன்னியர் என்றழைக்கப்படும்

1. பிராமி
2. மாகேஸ்வரி
3. கௌமாரி

4. வைஷ்ணவி
5. வாராகி
6. இந்திராணி
7. சாமுண்டி

இவர்களுடன் விநாயகர் சிற்பமும் வீரபத்திரர் சிற்பமும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பல்லவர் கால ஓவியம் – அருமாமலை

வேலூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டத்தில் உள்ள மேல்மலையாம்பட்டு என்ற ஊருக்கு அருகில் உள்ள சிறுகுன்றுத் தொடர் வரிசையில் இந்நினைவுச் சின்னம் அமைந்துள்ளது. அங்குள்ள குன்றின் அடிப்பாகத்தில் இயற்கையாக அமைந்துள்ள குகைத்தளத்தின் மேல் பகுதியில் பல்லவர் காலத்து சமணச் சிற்பங்கள் வரையப்பட்டிருந்தது. தற்போது அவைகள் காலப்போக்கில் பெரும்பகுதி உதிர்ந்துவிட்டது. ஓவியங்கள் இருந்தமைக் காண எச்சங்கள் மட்டுமே அங்கும் இங்கும் காணப்படுகின்றது. முனைவர் நாகசாமி அவர்கள் தமது ஓவியப்பாவை என்ற நூலில் இங்குள்ள ஓவியம் குறித்து விரிவாக எடுத்துரைக்கின்றார் எனினும் தற்பொழுது அங்கு ஓவியங்கள் உதிர்ந்து விட்டன. இவ்வோவியங்களுக்குக் கீழே தரையில் சமணக் கல்படுக்கைகளும் கி.பி. 7 மற்றும் 8-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சமணர்கள் வாழ்ந்த கட்டிடப் பகுதிகளும் உள்ளன. இந்நினைவுச் சின்னத்திற்கு மிக அருகாமையிலேயே பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் சிலவும் கருப்புச் சிவப்பு மட்பாண்ட ஓடுகளுடன் கூடிய சாம்பல் மேடு ஒன்றும் உள்ளது.

## வேலூர் கோட்டை

வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள முக்கியமான தொல்லியல் சின்னம் வேலூர் கோட்டையாகும். இக்கோட்டையும் அதனுள் அமைந்துள்ள கட்டிடப் பகுதிகளும் இந்தியத் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இக்கோட்டையை கி.பி. 1526 – 1595ல் வேலூர் பகுதியை ஆட்சி செய்த சின்ன பொம்மு நாயக்கராலும்

அவர்களின் சகோதரர்களாலும் கட்டப்பட்டதாகும். இக்கோட்டை வேலூரின் மையப்பகுதியில் 133 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. தென்னிந்தியாவில் கோட்டைகள் எப்படி கட்டப்பட்டிருக்கும் என்பதை அறிய முழுமையாக நமக்குக் கிடைக்கக் கூடிய ஒரே கோட்டை வேலூர் கோட்டையேயாகும். இக்கோட்டையின் உள்பகுதியிலேயே இந்து மதத்தினர் வணங்கும் ஜலகண்டேசுவரர் கோயிலும், கிருத்துவர்கள் வணங்கும் 1846-ல் கட்டப்பட்ட தேவாலயம் ஒன்றும் இசுலாமியப் பெருமக்கள் தொழுகை நடத்தும் மசூதி ஒன்றும் அமைந்துள்ளது சிறப்பான ஒன்றாகும்.

மேலும் இக்கோட்டையில் ஐதர் மகால், திப்பு மகால், பேகம் மகால், கண்டி மகால் பாதுஷா மகால் என்று ஐந்து மன்னர் பரம்பரையினரைக் குறிப்பிடும் மகால்கள் அமைந்துள்ளன. வேலூர் கோட்டையும் அதனைச் சுற்றியுள்ள பெரிய அகழியும் மிகவும் முக்கியம் வாய்ந்தவைகளாகும்.

## மேல்பாடி கோயில்கள்

வேலூர் மாவட்டத்தில் வாலாசா வட்டத்தில் மேல்பாடி என்னும் ஊர் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஓர் ஊராகும். பேரரசன் இராசராசன் இங்கு சோமநாதருக்குக் கோயில் எடுப்பித்ததும் அதன் அருகிலேயே இராசராசன் தமது பாட்டனார் அரிஞ்சயச் சோழனுக்கு அவரை அடக்கம் செய்த இடத்தில் அரிஞ்சய சோழீஸ்வரம் என்ற பெயரில் பள்ளிப்படை கோயில் ஒன்று எடுப்பித்ததுமே காரணமாகும். இவ்விரு சிறப்பு மிக்க கோயில்களும் நுகா என்னும் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. போற்றுதளுக்குரியதாகும். இவ்வூரில் உள்ள கோயில்களில் முதலாம் இராசராசன், முதலாம் ராசேந்திரன், கோப்பெருஞ்சிங்கன், சம்புவராயர்கள், விசய நகர மன்னர்கள் ஆகியோரின் கல்வெட்டுகள் நிறைந்து காணப்படுவதும் அவற்றின் மூலம் அக்கால வரலாற்றை அறிய முடிவதும் சிறப்பான ஒன்றாகும்.

மேல்பாடியில் உள்ள சோமநாதர் கோயிலில் உள்ள ஏழு கன்னியர் சிற்பங்களும் பிற சிற்பங்களும் ராசராசன் காலத்துச் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

# வள்ளிமலை நினைவுச் சின்னங்கள்

வேலூர் மாவட்டத்தின் குறிப்பிடத் தக்க நினைவுச் சின்னங்களில் வள்ளிமலை சமணச் சிற்பங்களும் ஒன்றாகும். இந்நினைவுச் சின்னம் தற்போது காட்பாடி வட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு கி.பி. 9 மற்றும் 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணச் சிற்பங்கள் உள்ளன. இராட்டிரகூட மன்னரான மூன்றாம் கிருஷ்ணாவின் கல்வெட்டும் இங்குள்ளது. இவ்வூரின் அருகில் அமைந்துள்ள மேல்பாடியும், கோட்டைமேடு என்ற பகுதியும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களாகும். கோட்டை மேட்டுப் பகுதியில் சில ஆண்டுகளுக்கு முன்பு இராசராசன் காலத்து வெள்ளிக்காசுகள் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. இங்குள்ள சமணச் சிற்பங்களும் தீர்த்தங்கரர் சிற்பங்களும் கி.பி.9-ஆம் நூற்றாண்டின் கலைப்பாணிக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

# திருப்பான் மலை

திருப்பான்மலை இந்தியத் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வரும் சின்னமாகும். இது ஆர்க்காட்டில் இருந்து தென்மேற்கே 6 கி.மீ. தூரத்தில் விளப்பாக்கம் என்ற கிராமத்தின் எல்லைப் பகுதியில் ஆர்க்காடு கண்ணமங்கலம் செல்லும் சாலையில் அமைந்துள்ளது.

இங்கு பல்லவர்காலக் குடைவரை ஒன்று குன்றின் தென்பகுதியில் அமைந்துள்ளது. ஆறு முழுத்தூண்களையும் இரு அரைத் தூண்களையும் கொண்டு குடைவரை குடையப்பட்டுள்ளது. இக்குடைவரையின் மேல் பகுதியில் சமணத் தீர்த்தங்கரர் சிற்பம் ஒன்று குடையப்பட்டுள்ளது. இக்குன்றின் மேல் சமணப்படுக்கைகள் சிலவும் அக்கால செங்கல் கட்டிடப் பகுதிகள் சிலவும் சிதைந்த நிலையில் உள்ளது. அழகிய அம்பிகை யக்ஷியின் உருவம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. அச்சிற்பம் பல்லவ மன்னன் தந்திவர்மன் காலத்தில் வெட்டப்பட்டது என்பதை இங்குள்ள கல்வெட்டு கூறுகின்றது. இங்கிருந்த சமண முனிவர்களுக்கு இதன் அருகிலேயே கூராம்பாடி என்ற ஊரை இறையிலியாக இராசராசன் கொடையாக அளித்ததை

இங்குள்ள மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கின்றது. மேல் குன்றிலும் இக்கல்வெட்டின் அருகிலும் தீர்த்தங்கரர் சிற்பங்கள் அழகுற புடைப்புச் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

## மகேந்திரவாடி

அரக்கோணம் வட்டம் மகேந்திரவாடியில் அமைந்துள்ள மகேந்திர விஷ்ணுகிருகம் என்னும் குடைவரை குறிப்பிடத்தக்க ஓர் வரலாற்றுச் சின்னமாகும். இச்சின்னத்தினை இந்தியத் தொல்லியல் துறை பாதுகாத்து வருகின்றது.

இக்குடைவரை கோயில் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்ட மிகவும் பழமையான குடைவரைகளில் ஒன்றாகும். இது கி.பி.600-630-ஆம் ஆண்டுகளில் ஆட்சி செய்த மகேந்திரவர்மன் காலத்தில் குடையப்பட்ட குடைவரையாகும். இக்குடைவரைக்கு மகேந்திர விஷ்ணுகிருகம் என்று மகேந்திரப் பல்லவன் பெயரிலேயே பெயரிடப்பட்டுள்ளதை இங்குள்ள மகேந்திரவர்மன் காலத்து கிரந்தக் கல்வெட்டு நமக்குத் தெளிவாக்குகின்றது.

வெட்டவெளியான ஓர் இடத்தில் தனியான ஒரு சிறு பாறையை குடைந்து உருவாக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பாகும். காண்போரை கவரும் வண்ணம் இரு முழுத்தூண்களுடனும் இரு அரைத் தூண்களுடனும் மிகவும் எளிய முறையில் இக்குடவரை குடையப்பட்டுள்ளது. தூண்களில் போதிகை மட்டுமே குடையப்பட்டுள்ளது மிகவும் எளிமையாக உள்ளது.

## திப்பு சுல்தான் குடும்பத்தினர் கல்லறைகள்

ஆங்கிலேயருக்கு எதிராக நடந்த சண்டையில் திப்பு சுல்த்தான் 4-5-1799 அன்று கொல்லப்பட்டார். அவரை ஸ்ரீரங்கப்பட்டணத்திலேயே அடக்கம் செய்தனர். அவரது உறவினர்கள் கைதிகளாக வேலூர் கோட்டைக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் ஒருவர்பின் ஒருவராக இறக்கவே அவர்களை கோட்டையில் இருந்த சுமார் 1 கி.மீ. கிழக்கே

ஆர்க்காடு செல்லும் சாலையில் உள்ள கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்தனர். அவர்கள் அடக்கம் செய்தவர்களில் திப்புவின் உறவினர்கள் :

1. பக்ஷி பேகம் (திப்புவின் தாயார்) மறைவு 1808
2. பல்ஹறா பேகம் (ஹைதரின் மனைவி)
3. துல்காரா பேகம் (திப்புவின் மகள்)
4. பூர்ணியா (திப்புவின் முதல் அமைச்சர்)
5. பூர்ணியாவின் மகள்
6. முஸ்தபா சாகிபு (திப்புவின் அமைச்சர்)
7. அன்வர் (மற்றுமோர் அமைச்சர்)
8. மிர்ஜாராஜா ஹுசைன் (திப்புவின் மருமகன் துல்காராபேகம் கணவர் - 1835)
9. பாத்திமா பேகம் - திப்புவின் இன்னொரு மகள் - 1835)
10. பாதுஷா பேகம் (திப்புவின் மனைவி) - 1835

ஆகியோர் அடங்குவர் இக்கல்லறைகள் மிகவும் அழகுற இந்தோ சார்சானிக் கட்டிடக் கலைப் பாணியைப் பின்பற்றி கட்டப்பட்டுள்ளது. மேலும் இக்கல்லறைகள் ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோரின் வீரத்தையும் புகழையும் உலகுக்குப் பறைசாற்றும் வண்ணம் அமைந்துள்ளன.

# ஆர்க்காட்டுச் சின்னங்கள்

## கோட்டைகள்

ஆர்க்காட்டில் நவாப் சாதத்துல்லாகான் கட்டிய அரண்மனையின் இடுபாட்டுப்பகுதிகளும், தூர்ந்து விட்ட அகழியும், மசூதிகளும் பிற கட்டிடப்பகுதிகளும் மிகவும் பழமையானவைகளாகும். இவைகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் செங்கற்களாலும் சுதையாலும் கட்டப்பட்டவைகளாகும். அவைகள் தற்பொழுது பெரும்பகுதி அழிந்துவிட்டன. கோட்டைப் பகுதியில் உள்ள குளம். தொழுகை செய்த மசூதி, அதன் அருகில் உள்ள கிணறு போன்றவையே எஞ்சியுள்ளன. இக்கோட்டைப்பகுதி சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் விரிந்துள்ளது. பாலாற்றில் இருந்து மசூதிக்கு அருகில் உள்ள குளத்திற்குத் தண்ணீர் வந்து மீண்டும் பாலாற்றிற்கே செல்லும் வண்ணம் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது போற்றத் தக்க ஓர் அமைப்பாகும். இக்கோட்டைக்கு ஆலம்பான கோட்டை என்று பெயர்.

## டெல்லிகேட்

கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஆர்க்காட்டின் நவாப் உரிமைக்காக சந்தாசாகிப்பிற்கும் முகமது அலிக்கும் நடந்த போரில் ஆங்கிலேயர் முகமதுஅலி சார்பாக போரில் நுழைந்தனர். 26-8-1751-ஆம் நாளன்று முகமதலியின் சார்பாக ஆங்கிலப் படைகள் ஆர்க்காட்டில் நுழைந்து போட்டியாளரான சந்தாசாகிப்பை கோட்டையை விட்டு விரட்டி இராபட் கிளைவ் தலைமையில் வெற்றி கண்டனர். இராபட் கிளைவின் இவ்வெற்றியே பின்னாளில் ஆங்கிலேயர் ஆதிக்கம் இந்தியா முழுவதும் பரவி இந்தியாவை ஆங்கிலேயர் கைப்பற்றக் காரணமாக அமைந்தது. எனவே தனது வெற்றியின் நினைவாக இராபட் கிளைவ் கட்டிய இக்கட்டடமே டெல்லிகேட் என அழைக்கப்படகின்றது. இந்த டெல்லிகேட் நுழைவாயில் தரைதளம் முதல்தளம் என இருபகுதிகளைக் கொண்டது. தரை தளத்தின் நுழைவு வாயிலின் இருபுறமும் ஆயுதக்கிடங்காகப் பயன்படுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. முதல் தளத்தில் காற்றோட்டமாக வீரர்கள் தங்கவும், அங்கிருந்தே அவர்கள் எதிரிகளின் வருகையையும் நடமாட்டத்தையும் கண்காணிக்க வசதியாகவும்

பீரங்கிகள் பொறுத்தி பீரங்கி தாக்குதல் நடத்த ஏதுவாகவும் உள்ளவாறு இக்கட்டிடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. உறுதியான செங்கல் மற்றும் சுதைகளைக் கொண்டு சுமார் 4 அடி அகலத்தில் சுவர் அமைக்கப்பட்டுள்ளது போற்றத் தக்கதாகும்.

**பச்சைக்கல் மசூதி (தர்கா)**

ஆர்க்காட்டில் நவாப்புகளின் காலத்தில் 365 மசூதிகள் இருந்ததாகவும் ஒரு இசுலாமிகள் தினமும் ஓர் மசூதிக்கு என சுழற்சி முறையில் தொழுகைக்கு சென்றால் வருடத்திற்கு ஒரு நாள் மட்டுமே ஒரு மசூதியில் தொழுகை புரிந்தனர் என்ற செவிவழிச் செய்தி இங்கு நிலவி வருகின்றது.

முஸ்லீம் பெரியவர்களை அடக்கம் செய்த இடத்தில் தர்க்கா எழுப்பி அவர்களுக்கு மரியாதை செய்து வணங்கும் பழக்கம் உள்ளது. அவ்வாறு கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திப்பு அவுலியா என்ற இசுலாமியப் பெரியவரை அடக்கம் செய்த இடத்தில் எழுப்பப்பட்டுள்ள தர்க்காவே தற்பொழுது பச்சைக்கல் மசூதி என அழைக்கப்படுகின்றது. முழுவதும் பச்சைநிற கற்களைக் கொண்டு இந்திய இசுலாமிய கட்டடக்கலைப் பாணியில் இக்கட்டடம் கட்டப்பட்டு காண்போரைக் கவரும் வண்ணம் கட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வேலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறப்பான பல தொல்லியல் சின்னங்களும் கட்டடங்களும் அமைந்துள்ளது. இம்மாவட்டத்திற்குச் சிறப்புச் சேர்க்கும் நிகழ்வுகளில் ஒன்றாகும்.

## வசீஸ்டீஸ்வரர் திருக்கோயில் – வேப்பூர்

வேலூர் மாவட்டம், வாலாசா வட்டத்தில் சென்னை - பெங்களூர் தங்கநாற்கரச் சாலையை ஒட்டி பாலாற்றின் தென்கரையில் ஆர்க்காடு நகருக்கு வடமேற்கே சுமார் 4 கி.மீ. தூரத்தில் வேப்பூர் என்ற அழகிய சிற்றூர் அமைந்துள்ளது. இவ்வூருக்கும் பாலாற்றுக்கும் இடையில் பாலாற்றின் தென்கரையில் வசிஸ்டீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது.

காஞ்சியில் காமாட்சியாக இருந்த அன்னையை மணம் முடித்து இறைவன் கயிலாயத்தில் இருந்து காஞ்சிபுரம் வந்ததாகவும் இறைவனின் திருமண விழாவைக் காண வடபுலத்தில் இருந்து முனிவர்கள் பலர் காஞ்சிபுரம் வந்து காஞ்சிபுரத்தைச் சுற்றி மடங்கள் அமைத்துத் தங்கினார்கள் என்றும் அவ்வாறு தங்கிய முனிவர்களில் வசிஸ்டர் வேப்பூரில் இருந்த வனப்பகுதியில் தங்கினார் என்றும் அவர் தினமும் இறைவனை வணங்க இறைவனை எழுந்தருளச் செய்தார் என்றும் அவர் நிறுவிய லிங்கம்தான் வசிஸ்டீஸ்வர் என்றும் செவி வழிச் செய்தி நிலவி வருகின்றது. வசிஸ்டரால் நிர்மானிக்கப்பட்டதாலேயே இக்கோயில் 'வசிஸ்டீஸ்வர் கோயில்" என்றும் அழைக்கப்படுகின்றது.

வேப்பூரில் உள்ள வசிஸ்டீஸ்வரர் கோயில் இன்றைய தமிழகத்தின் வடபகுதியின் ஒரு பகுதியை கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் 'படைவீடு ராஜ்ஜியம்" என்ற பெயரில் சீரோடும் சிறப்போடும் ஆட்சி செய்த சம்புவராயர்களின் ஆட்சியில் கட்டப்பட்டதாகும். வென்று மண்கொண்ட ஏகாம்பரநாத சம்புவராயன் மகனான இரண்டாம் இராசநாராயண சம்புவராயரால் அவரது 19–ஆம் ஆட்சியாண்டில் கி.பி 1356–ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்பதை இக்கோயிலில் உள்ள அம்மன்னன் கல்வெட்டால் அறியமுடிகின்றது. எனினும் வேப்பூர் வயல்வெளியில் உள்ள ஓர் கல்வெட்டு இராசநாராயணன் தந்தையான ஏகாம்பரநாத சம்புவராயர் காலத்திலேயே கி.பி. 1339 இக்கோயிலைப் பற்றிய குறிப்பைத் தருகின்றது. எனவே இக்கோயில் முதலில் சுதையாகவோ சிறிய கோயிலாகவோ இருந்திருக்கலாம். அதை ராசநாராயணன் கற்றளியாக மாற்றி பெரிய அளவில் கட்டியுள்ளார் என்பது இதிலிருந்து புலணாகிறது.

இக்கோயிலின் கருவறை சிறியதாக கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் நுழைவாயில் இரண்டு அரைத்தூண்களுக்கு இடையில் உள்ளவாறு அழகாக வடிவமைத்து கட்டப்பட்டுள்ளது. கருவறைக்கமேல் விமானம் கட்டப்பட்டுள்ளது. விமானம் அதிட்டானம் முதல் கும்ப பஞ்சரம் வரை கற்றளியாகவும் அதற்கு மேல் உள்ள பகுதி சிகரம் வரை சுதையாலும் கட்டப்பட்டுள்ளது. வியாசர கலைப்பாணியில் ஏக தள விமானமாக இவ்விமானம் கட்டப்பட்டுள்ளது. விமானத்தின் கர்ண கூடுகளில் சிற்பங்கள் ஏதும் காணப்படவில்லை. ஆனால் விமானத்தின் சிகரப்பகுதியில் இருந்து

பூங்கொத்துக்கள் வரிசையாகக் கீழ்நோக்கித் தொங்குவது போன்ற பூச்சர அமைப்பு காட்டப்பட்டுள்ளது. இவ்வமைப்பு சம்புவராய மன்னர்களின் கோயில்களில் அவர்களின் கட்டிடங்களுக்கே உரிய கலைப்பாணியாக கையாளப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கருவறை யானது பீடம், உபபீடம், ஜகதி, கண்டம், முப்பட்டைக் குமுதம், பட்டிகை, வேதிகை முதலியப் பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. இக்கோயிலில் அடுத்து குறிப்பிடப்பட வேண்டிய சிறப்பு கருவறையின் வடபுறமும், தென்புறமும் அமைந்துள்ள கும்ப பஞ்சரங்கள் ஆகும். இவைகள் இரண்டு அரைத்தூண்களுக்கு இடையில் உள்ளவாறு அதிட்டானம் முதல் நாசிவரை பெரியவைகளாக அழகான வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் மகாமண்டபத்தின் நுழைவாயிலில் உள்ள வாயிற்காப்போன் சிற்பங்களும் குறிப்பிடத் தக்கவகையிலும் சிறப்பாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

கோயிலின் தேவகோட்டத்தில் உள்ள சிலைகள் பிற்காலத்தில் மாற்றப்பட்டுள்ளன. எனினும் நந்தி, சூரியன், சந்திரன், ஏழு கன்னியர் சிற்பங்கள் மற்றும் நவகிரகச் சிற்பங்களும் சம்புவராயர் காலத்துச் சிற்பங்களாகவே உள்ளன. கருவறையை அடுத்து கருவறையையும் நடுமண்டபத்தினையும் ஒரு சிறிய இடைநாழி இணைக்கின்றது. இம்மண்டபத்தை அடுத்து ஒரு மகாமண்டபம் உள்ளது. இதுவரை மேற்சொன்ன கட்டடங்கள் அனைத்தும் இக்கோயிலில் சம்புவராயர்களால் கட்டப்பட்ட பகுதிகளாகும்.

இதனை அடுத்து உள்ள முகமண்டபமும் அதனை ஒட்டி உள்ள கல்யாண மணடபமும் விசயநகர கலைப் படைப்பாகும். இக்கோயிலின் இராசகோபுரம் தெற்குப்புற மதில் சுவரில் தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரம் திராவிடக் கட்டிடக்கலைப் பாணியில் மூன்று தளவரிசைகளைக் கொண்டு விசயநகர மன்னர்களால் கட்டப்பட்டதாகும்.

இவை தவிர இறைவியான பாலகுஜாம்பிகை அம்மையாருக்கும், விநாயகருக்கும், சுப்பிரமணியருக்கும் தனித்தனியே சிற்றாலயங்கள் கட்டப்பட்டுள்ளது. நந்தி மண்டபம், கொடிமரம், மடப்பள்ளி முதலான கோயிலின் அனைத்து அங்கங்களும் கோயில் அமைப்பு முறைப்படி சரியாக அமைத்துக் கட்டப்பட்டுள்ளது போற்றத் தக்கதாகும்.

### சிற்பங்கள்

வேப்பூர் கோயிலில் குறிப்பிடத்தக்கச் சிற்பங்களில் தலையானது வசிஸ்டர் சிற்பமாகும். இச்சிற்பம் மகாமண்டபத்தில் மேற்கு நோக்கி நின்றவாறும் இறைவனை வணங்கும் நிலையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 அடி உயரம் உடைய இச்சிற்பம் பத்திரபீடத்தின் மீது நின்று வணங்கும் நிலையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. முனிவருக்கே உரித்தான கேசபந்தம், நீண்ட தாடி, ருத்திராட்ச மாலை ஆகியவைகளைக் கொண்டு இச்சிற்பம் விளங்குகிறது.

கோயிலின் முக மண்டபத்தினை ஒட்டி உள்ள கல்யாண மண்டபத் தூண்களில் நாற்புறமும் சிறிய சிறிய புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. அவைகள் அனைத்தும் அழகான முறையில் செதுக்கப்பட்டுள்ளது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இச்சிற்பங்களில் மகிசாசுரமர்த்தினி, ஆடவல்லான், திரிபுராந்தகர், குபேரன், மகாவிஷ்ணுவின் அவதாரங்கள் மற்றும் சிவபெருமானின் பல்வேறு உருவங்களும் வடிவமைத்துக் காட்டப்பட்டுள்ளது.

### செப்புத் திருமேனிகள்

வேப்பூர் கோயிலில் ஆடவல்லான், சிவகாமி, சந்திரசேகரர், அம்மன், மாணிக்கவாசகர், முருகன், வள்ளி, தெய்வயானை முதலிய செப்புத்திருமேனிகள் காணப்படுகின்றன. ஆனால் அவைகள் காலத்தால் மிகவும் பிற்பட்டவைகளாகும்.

வேப்பூர் வசிஸ்டீஸ்வரர் கோயிலைப் பற்றி அறிய நமக்கு மொத்தம் 12 கல்வெட்டுகள் துணை செய்கின்றன. அவைகளில் ஆறு கல்வெட்டுகள் சம்புவராயர்களாலும் ஆறு கல்வெட்டுகள் விசயநகர மன்னர்களாலும் வெட்டப்பட்டவைகளாகும். அனைத்துக் கல்வெட்டுகளுமே இக்கோயிலுக்கு மன்னர்களால் நிலம் வழங்கப்பட்ட செய்தியைத்தான் தருகின்றன. சம்புவராயர்களின் ஒரே ஒரு கல்வெட்டில் அக்காலச் சாதிப் பெயர்கள் சில குறிப்பிடப்படுவதால் அக்காலச் சமுதாய நிலையை நாம் சிறிது அறிந்து கொள்ள உதவும்.

எனவே இக்கோயில் சம்புவராயர்களால் கட்டப்பட்டு விசயநகர மன்னர்களால் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் இக்கோயிலின் ஓர் கல்வெட்டு அக்கால சமுதாய நிலையை அறிய உதவுகின்றது என்பதையும் அறிவோம்.

# அவரக்கரை தானிய உறை

வேலூர் மாவட்டம், வாலாசா வட்டம். இராணிப்பேட்டைக்கு மேற்கில் உள்ள அவரக்கரை கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட தானிய உறை ஒரு குறிப்பிடத் தக்கத் தொல்பொருளாகும். ஏனெனில் இதுவரை தமிழகத்தில் முழுமையான செய்தியைச் சொல்லும் எழுத்துப் பொறிப்புடன் கூடிய தானிய உறை ஏதும் கண்டெடுக்கப்படவில்லை. இவ்வகையில் இதுவே முதலாவதாகும். பொன்னை ஆறு என உள்ளூர் மக்களாலும் ' நுகா" ஆறு என மாமன்னன் இராசராசச் சோழனால் மேல்பாடி கல்வெட்டிலும் குறிப்பிடப்படும் நுகா ஆற்றின் வடகரையில் அவரக்கரை அமைந்துள்ளது. அங்கு சுமார் 30 முதல் 40 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள மண்மேட்டில் இத்தானிய உறை கண்டெடுக்கப்பட்டது. இப்பகுதியில் அடுத்தடுத்து வரிசையாகப் பல தானிய உறைகள் மண்ணில் புதைந்துள்ளன. ஆனால் அவைகளில் சிறப்பான ஒன்று எழுத்துப் பொறிப்புடன் கூடிய தானிய உறையேயாகும். இத்தானிய உறையின் மேல் விளிப்புப் பகுதி 8 செ.மீ. அகலத்துடன் காணப்படுகின்றது. அவ்விளிம்புப் பகுதியில்

' ஸ்வஸ்திஸ்ரீ கடக்கங் கொண்டாந் அகமுடையாள்
துக்கையாண்டி தன்மம்"

என எழுத்துப் பொறிப்பு உள்ளது. கடக்கங் கொண்டான் என்பவரின் மனைவி துக்கையாண்டிர் என்பவள் செய்து கொடுத்த தருமம் என்பது அவ்வெழுத்துப் பொறிப்பின் பொருளாகும். எழுத்தமைதியைக் கொண்டு இத்தானிய உறையும் அதன் மேல் உள்ள எழுத்துப் பொறிப்பும் கி.பி.12–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என அறிய முடிகிறது. மேல்பகுதி 80 செ.மீ. விட்டமும் அடிப்பகுதி 105 செ.மீ. விட்டமும் 70 செ.மீ. உயரமும் கொண்ட இத்தானிய உறையின் வெளிப்புறம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று பகுதிகளிலும் தானிய உறையின் வெளிப்புறத்தில் புடைப்புச் சிற்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மூன்று தொகுதிகளாக உள்ள புடைப்புச் சிற்பங்களில் முதற்தொகுதியில் விநாயகர் உருவம் அமர்ந்த நிலையில் உள்ளது. அவ்விநாயகர் சிற்பத்தின் வலதுபுறம் குதிரைவீரன் ஒருவனின்

உருவமும் இடப்புறம் வணங்கும் நிலையில் உள்ள மனித உருவமும் வடிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது தொகுதியில் குரங்கு ஒன்று இடப்புறமாக திரும்பி நின்றநிலையில் காணப்படுகின்றது. அதனையடுத்து மூன்று பெண்கள் வரிசையாக நின்ற நிலையில் உள்ளது காட்டப்பட்டுள்ளது. மூன்று பெண்களும் மார்பு கச்சை இன்றி காட்சியளிக்கின்றனர். அவர்களுள் நடுவில் உள்ள பெண் கற்பிணிப் பெண்ணாகக் காட்டப்பட்டுள்ளது. தானியத்தை எதிர்காலத்திற்காகச் சேமித்து வைப்பது வளமை கருதியேயாகும். கற்பிணிப் பெண்ணைத் தானிய உறையின் மீது வடிக்கப்பட்டுள்ளது. வளமையின் சின்னமாகும். இக்கருத்து இங்கு கூர்ந்து நோக்கத் தக்கதாகும். இப்பெண்மணிகளுக்கு இணையாக நின்றநிலையில் யானை ஒன்று புடைப்புச் சிற்பமாக உள்ளது. சிற்பத் தொகுதிக்குக் கீழே ஒரு யானை உள்ளது. யானைகளின் கழுத்துக்களிலும், வயிற்றுப் பகுதிகளிலும் மணியாரங்கள் உள்ளன.

மூன்றாவது சிற்பத் தொகுதியில் நடுவில் ஒரு பெண் நடனமிடுவதும் இந்நடன மாதுவின் வலப்புறம் ஓர் ஆடவனும் இடதுபுறத்தில் ஒரு பெண்ணும் அம்மாதுவின் நடனத்திற்கு நின்றநிலையில் மத்தளம் வாசிக்கின்றனர்.

இவ்வாறு கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவப்புநிற சுடுமண் தானிய உறை தமிழகத்தில் முதன்முதலில் கண்டெடுக்கப்பட்ட சிறப்பான தானிய உறையாகும்.

# வேலூர் மாவட்டப் பாறை ஓவியங்கள்

ஒரு மாவட்டத்தின் வரலாற்றினைத் தொல்லியல் பார்வையில் பார்க்கும்பொழுது அம்மாவட்டத்தில் உள்ள பாறை ஓவியங்களைப் பற்றி அறிந்து கொள்வதும் இன்றியமையாத ஒன்றாகும். தமிழகத்தில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட பாறை ஓவியமான மல்லப்பாடி பாறை ஓவியம் வேலூர் மாவட்டம் மற்றும் கிருட்டிணகிரி மாவட்டங்களின் எல்லைப் பகுதியில் உள்ள பாறைகளில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. பண்டைய மனிதன்தான் எழுத்தறிவு பெறாத காலத்திற்கு முன்பாகவே தமது கருத்துக்களையும் எண்ணங்களையும் பிறருக்கு அறிவிக்கவும் வெளிப்படுத்தவும் பாறைகளில் ஓவியங்களை வரைந்தான். அவன் ஓவியமாக வரைவதற்கு இயற்கையாகக் கிடைத்த பூக்களின் நிறங்களையும் தழைச்சாறுகளையும் பயன்படுத்தினான். வேலூர் மாவட்டத்தில் உள்ள பாறை ஓவியங்களில் வெண்ணிறம் மற்றும் காவி நிறம் கொண்டு ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள பாறை ஓவியங்களில் பெரும்பாலானவைகள் பெருங்கற்கால நினைவுச் சின்னங்களிலோ அல்லது பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் இருந்த இடங்களின் அருகில் உள்ள பாறைகளிலேயே வரையப்பட்டிருப்பதால் பெருங்கற்கால மனிதனுக்கும் பாறை ஓவியங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதை வரலாற்று அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

வேலுரர் மாவட்டத்தின் பெரும்பகுதிகளில் பெருங்கற் சின்னங்கள் காணப்படுவதாலும் இம்மாவட்டம் காடுகள் நிறைந்தப் பகுதிகளாக உள்ளதாலும் ஜவ்வாது மலைத் தொடர் மற்றும் ஏலகிரி மலைப் பகுதிகளும் பாறைகளும் இம்மாவட்டத்தில் காணப்படுவதால் இயற்கையாகவே இங்கு பாறை ஓவியங்களுக்கான சாதகமான நிலை நிலவியது என்றால் அது மிகையாகாது. வேலூர் மாவட்டத்தில்

1. சென்றாயன்பள்ளி
2. ஆலங்காயம்
3. சந்திரபுரம்

4. சிவநாதபுரம்

5. கீழ் மின்னல்

ஆகிய இடங்களில் பாறை ஓவியங்களும் குறியீடுகளும் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

**சென்றாயன்பள்ளி**

சென்றாயன்பள்ளி குடியாத்தத்தில் இருந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. இவ்வூரில் உள்ள சொத்தைமலையின் கிழக்குப் பகுதியில் இப்பாறை ஓவியம் காணப்படுகின்றது. சுமார் 10 மீட்டர் அகலத்திலும் சுமார் 7 மீட்டர் உயரத்திலும் இப்பாறை ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

இரண்டு உயரமான மனித உருவங்கள் ஒன்றின் கையை மற்றொன்று பிடித்த நிலையிலும் உள்ளபடி குகையின் வடபுறத்திலும் குகையின் தென்புறத்தில் குதிரை, யானை, குதிரையின் மீது பயணம் செய்யும் மனிதன் மற்றும் சில மனிதர்கள் நின்ற நிலையிலும் கிடந்த நிலையிலும் உள்ளபடி ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. சில புல் போன்ற தாவர வகைகளும் சூரியன், நட்சத்திரங்கள், பறவைகள் போன்றவைகளும் வரையப்பட்டுள்ளன. கைப்பிடியுடன் கூடிய இரண்டு பெரிய பானைகளும், ஒரு உடுக்கையும்கூட இங்கு வரையப்பட்டுள்ளன.

வெள்ளை நிறத்தில் காட்சியளிக்கும் இப்பாறை ஓவியங்கள் கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

**ஆலங்காயம் பாறை ஓவியம்**

வாணியம்பாடி வட்டம் ஆலங்காயத்திற்கு அருகில் உள்ள துருகம் என்ற இடத்தில் உள்ள பாறையில் இவ்வோவியம் கண்டறியப்பட்டுள்ளது. வெள்ளை நிறத்தில் வரையப்பட்டுள்ள இவ்வோவியங்களும் கி.மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்தவைகளாகும்.

திரிசூலம், வில், அம்பு, பசு போன்ற உருவங்களும் சூரியனுக்கு முன்பாக ஒரு மனிதன் நிற்பது போலவும் இங்கு வரையப்பட்டுள்ளது. மனிதர்கள் வட்டமாக நிற்பது போலவும் மனிதன் ஒருவன் நின்ற ஒரு அடையாளம் காண இயலாத மிருகத்துடன் இருப்பது போலவும் இங்கு வரையப்பட்டுள்ளது.

**சந்திரபுரம் பாறை ஓவியம்**

திருப்பத்தூரில் இருந்து சுமார் 12 கி.மீ. தூரத்தில் உள்ள சந்திரபுரத்தில் பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. உள்ளூர் மக்களால் இவ்விடம் கல்யாண குகை என அழைக்கப்படுகின்றது.

சில குதிரைகளும், குதிரை மீது மனிதன் பயணம் செய்வது போலவும், குதிரைகள் ஓடுவது போலவும் ஆற்று நீர் ஓடுவது போலவும் இங்கு வரையப்பட்டுள்ளது. மனிதர்கள் வரிசையாக நிற்பது போலவும் அவர்களின் உடல் அமைப்பு உடுக்கை போலவும் முகம் பறவைகளின் அலகுகள் போன்றும் காட்டப்பட்டுள்ளது. கோயில் அமைப்புப் போல இங்கு வரையப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. சந்திரபுரம் பாறை ஓவியங்களும் வரலாற்றுக் காலத்தின் தொடக்கக் காலத்தைச் சார்ந்தது என கால நிர்ணயம் செய்யலாம்.

**கீழ் மின்னல் பாறை ஓவியம்**

வேலூர் - சென்னை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இரத்தினகிரி மலைக் குன்றின் வடகிழக்கு மூலையில் பாறை ஓவியங்கள் காணப்பட்டன. இரத்தினகிரி முருகன் கோயிலுக்கு மலைப்பாதை அமைத்தபொழுது இப்பாறை ஓவியங்கள் இருந்த பாறைகள் அழிக்கப்பட்டு விட்டன. இப்பாறை ஓவியமும் வெள்ளை நிறத்தில் வரையப்பட்டிருந்தது.

சூரியன், திரிசூலம், உடுக்கை போன்ற குறியீடுகள் இங்கு வரையப்பட்டிருந்தன.

**சிவநாதபுரம் பாறை ஓவியம்**

வேலூர் வட்டத்தில் உள்ள சின்னபாலம் பாக்கம் என்ற ஊருக்கு ருகில் உள்ள சிவநாதபுரம் மலையில் பாறை ஓவியங்கள் வெள்ளை நிறத்தில் வரையப்பட்டுள்ளது. இம்மலையின் உச்சியில் ஒரு குகையும் சுனையும் உள்ளது கிழக்கு நோக்கிய பாறையின் மேல்புறத்தில் சுனைக்கு அருகிலேயே இவ்வோவியங்கள் வரையப்பட்டுள்ளன.

இவ்வோவியங்களிலும் மனிதன் நின்ற நிலையிலும், குதிரை உருவங்கம் நீண்ட ஒரு மிருகத்தின் உருவமும் வில், அம்பு, உடுக்கை போன்ற உருவங்களும் வரையப்பட்டுள்ளன. சிவநாதபுரம் பாறை ஓவியங்களும் கி.மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்தவகைகளாகும்.

இக்கல்வெட்டிற்கு அருகிலேயே பல்லமன்னன் நிருபதுங்கன் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகின்றது. ஆனால் கால வேறுபாட்டால் அதற்கும் இதற்கும் தொடர்பு ஏதும் இல்லை.

# வேலூர் மாவட்டத்தில் உள்ள முக்கிய கல்வெட்டுகள்

வேலூர் மாவட்டம் வரலாற்றுக் காலம் தொடங்கி பல்லவர்களாலும், சோழர்களாலும், பாண்டியர்களாலும், சம்புவராயர்களாலும் விஜயநகர மன்னர்களாலும், நாயக்க மன்னர்களாலும், நவாப்புகளாலும் ஆங்கிலேயர்களாலும் தொடர்ச்சியாக ஆட்சி செய்யப்பட்ட வரலாற்று தொடர்ச்சியையும் பெருமையையும் கொண்டது. அம்மன்னர்கள் தங்கள் ஆட்சியின் நிருவாகத்திற்காக மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும், கோயில்களிலும் கல்வெட்டுகளை வெட்டியுள்ளனர். இக்கல்வெட்டுகளில் சில மிகவும் சிறப்புப் பெற்ற கல்வெட்டுகளாகும் அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

## ஒழுகூர் கல்வெட்டு

மதிரை கொண்ட கோப்பரகேசரி என அழைக்கப்படும் முதல் பராந்தகச் சோழன் கி.பி. 907 முதல் 953 வரை சோழப் பேரரசை ஆட்சி செய்தார் அவரது ஆட்சிக் காலத்தில் வேலூர் மாவட்டம் ஒழுகூர் என்ற ஊரின் அருகில் உள்ள ஏரிக்கு தூம்பு ஒன்றினை அமைத்து அதனை பராமரிக்க நில தானம் அளித்ததையும் இக்கல்வெட்டு உணர்த்துகின்றது. இப்பணியினைச் செய்தவன் மாவளி வாணவராயன் என்பதும் இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. சோழ மன்னர்கள் நீர்ப்பாசனத்திற்க்கும் வாய்க்காலுக்கும் இப்பகுதியில் எவ்வாறு கவனம் செலுத்திச் செயல்பட்டனர் என்பதை இக்கல்வெட்டு உணர்த்துகின்றது.

## திருப்பாற்கடல் கல்வெட்டு

இதே மன்னன் காலத்தில் வேலூர் மாவட்டம் காவேரிப் பாக்கத்திற்கு அருகில் உள்ள திருப்பாற்கடல் என்ற கிராமத்தில் கரபுரீஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயில் உள்ள கல்வெட்டு ஒன்று சோழர் காலத்தில் நிலவிய வாரியங்களையும் அதன் பணிகளையும் குறிப்பிடுகின்றது. பராந்தகச் சோழன் காலத்தில் ஏரி வாரியம், தோட்ட வாரியம், கழனி வாரியம், குடும்பு வாரியம், ஊர் வாரியம், கணக்கு வாரியம், கலிங்கு வாரியம், வட கழனி வாரியம்,தடிவழி வாரியம், சம்சத்

வாரியம், பஞ்ச வாரியம், ஸ்ரீ கோயில் வாரியம், பண்டார வாரியம், பொன் வாரியம், நாடு வாரியம் என பல்வேறு வாரியங்களையும் அவற்றின் பணிகளையும், அவ்வாரியப் பெருமக்களையும் பற்றி விரிவாகக் கூறுகின்றது. புகழ்பெற்ற உத்திரமேரூர் தேர்தல் கல்வெட்டுக்கு அடுத்து அதிகமான வாரிய அமைப்புகளைப் பற்றி விரிவாகக் கூறும் கல்வெட்டு இதுவேயாகும். புகழ்பெற்ற உத்திரமேரூர் கல்வெட்டும் கரபுரீஸ்வரர் கோயில் வாரியக் கல்வெட்டும் முதல் பராந்தகனாலேயே வெட்டப்பட்டது என்பது குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

## விளாப்பாக்கம் கல்வெட்டு

ஆர்க்காடு வட்டம் விளாப்பாக்கம் என்ற ஊரில் உள்ள சிவன் கோயிலில் முதல் பராந்தகன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டு சோழர் காலத்தில் இவ்வூரில் பெண் சமணத்துறவிகள் தங்கும் மடம் ஒன்று இருந்ததையும் இம்மடத்திற்கு இவ்வூரைச் சார்ந்த ஒருவர் கிணறு ஒன்று வெட்டிக் கொடுத்ததையும் இக்கல்வெட்டுக் கூறுகின்றது. அக்காலத்திலேயே சமணப் பெண் துறவிகள் இருந்ததையும் அவர்களுக்கென தனிமடம் அமைக்கப்பட்டிருந்ததையும் இக்கல்வெட்டு நமக்கு உணர்த்துகின்றது.இவ்வூர் அக்காலத்தில் அஞ்சினான் புகழிடமாகவும் இருந்திருக்கின்றது.

## திருமால்புரம் கல்வெட்டு

மதுராந்தக உத்தம சோழனின் 14-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 997) திருமால்புரத்தில் உள்ள மணிகண்ட ஈஸ்வரன் கோயிலில் வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்று சிறப்பான கல்வெட்டுகளில் ஒன்றாகும். மனயியல் நாட்டில் உள்ள ஊரான சிற்றாற்றூர் என்ற கிராமம் தொண்டைமானானூர் துஞ்சிய தேவரால் அவரது 21-வது ஆட்சியாண்டில் திருமால்புரத்தில் உள்ள சிவன் கோயிலுக்கு தேவதானமாக அளிக்கப்பட்டது. அம்மன்னனின் 22-வது ஆட்சியாண்டில் அக்கிராமத்தின் எல்லைகள் வரையறுக்கப்பட்டபோது சிற்றாற்றூர் தேவதானமாக பதியப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. இக்குறைபாடு மதுரையையும் ஈழமும் கொண்ட பரகேசரிவர்மனின் நான்காம் ஆட்சியாண்டில் நிவர்த்தி செய்யப்பட்டது. மேலும் இவ்வூரை தேவதானமாகப் பெற்றவர்கள் கோயிலுக்கு வருடாவருடம் குறிப்பிட்ட

அளவு விளைபொருட்களும் பொன்னும் வழங்கவேண்டும் என்ற கட்டுப்பாட்டுடன் பெற்றுக் கொண்டனர்.

மதுரையும் ஈழமும் கொண்ட பரகேசரின் 36-ஆம் ஆட்சியாண்டில் சிற்றாற்றூரைத் தேவதானமாகப் பெற்றவர்கள் கோயிலுக்குச் செலுத்த வேண்டிய விளைபொருட்களையும், பொன்னையும் செலுத்துவதில்லை என கோயில் பண்டாரத்தார் காஞ்சிபுரத்தில் இருந்த மன்னனிடம் முறையிட்டனர். மன்னர் கோயில் பண்டாரத்தாரையும் சிற்றாற்றூரில் உள்ள புதுப்பாக்கம் சபையார் (கோயிலுக்கு தேவதானத்தைச் செலுத்தாதவர்கள்) நேரில் அழைத்து விசாரித்து தவறு செய்த புதுப்பாக்கம் மகாசபையாருக்கு தண்டக் கட்டணம் விதித்ததுடன் கோயிலுக்கு மீண்டும் மானியத்தைத் தொடர்ந்து செலுத்த உத்தரவிட்டார் சோழ மன்னர்களின் நீதி முறைக்கும், ஆட்சித் திறத்திற்கும், நிலவுடமைகளைப் பராமறித்ததற்கும் இக்கல்வெட்டு ஓர் நல்ல சான்றாக உள்ளது.

**மேல்பாடி கல்வெட்டு**

மாமன்னன் முதலாம் இராசராசனின் 29-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1014) வாலாசா வட்டம் மேல்பாடியில் உள்ள அரிஞ்சய ஈஸ்வரமுடையார் கோயில் கல்வெட்டு ஓர் சிறப்பான கல்வெட்டாகும். சோழ மன்னர்கள் தங்கள் முன்னோரை மதித்து அவர்களை அடக்கம் செய்த இடத்திலோ அல்லது எரித்த இடத்திலோ அவர்களின் நினைவாக கோயில் அமைத்தனர். (பள்ளிப்படை) என்பதற்குச் சான்றாக உள்ள கல்வெட்டாகும். அவ்வாறு மன்னர்களால் தங்கள் முன்னோறுக்கு பள்ளிப்படையாக எழுப்பப்பட்டக் கோயிலை அவ்வூர் மக்களும் நிலக்கொடைகள் அளித்துப் போற்றினர் என்பதையும் இக்கல்வெட்டு விளக்குகின்றது. இக்கல்வெட்டு அரிஞ்சைய ஈஸ்வரம் என்ற பள்ளிப்படை நுகா என்ற ஆற்றங்கரையிலும் சோளேந்திர சிம்மேஸ்வரமுடைய கோயிலின் தெற்கிலும் அமைந்துள்ளதைக் குறிப்பிடுகின்றது. நுகா என்னும் ஆறு தற்பொழுது பொன்னை ஆறு என்றும் கோயில் சோமநாதர் கோயில் என்றும் உள்ளூர் மக்களால் அழைக்கப்படுகின்றது. இக்கல்வெட்டில் குறிப்பிடும் சில வாய்க்கால்கள் இன்றும் நல்ல நிலையிலும் ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் பயன்பாட்டிலும் உள்ளது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

## குட்டியம் கல்வெட்டு

ஆர்க்காடு வட்டம் குட்டியம் என்ற ஊரில் கி.பி. 1340-இல் சம்புவராய மன்னரான முதலாம் இராசநாரயணனால் தமது மூன்றாவது ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டும் இம்மாவட்டத்தில் உள்ள குறிப்பிடத்தக்க கல்வெட்டுகளில் ஒன்றாகும்.

வென்றுமண் கொண்ட சம்புவராயர் 1337-இல் இறந்து விடுகின்றார் அவரது மகன் பட்டத்திற்கு வருகின்றார். வென்று மண் கொண்ட சம்புவராயரின் உடலை எரித்த சாம்பலை அவரது படையில் இருந்த எழும்போதன் கங்கையாடி மாதையன் என்பான் கங்கைக்கு எடுத்துச் சென்று கரைத்துவிட்டுத் திரும்பினான் அவரது இச்செயலைப் பாராட்டி வென்று மண்கொண்ட சம்புவராயரின் மகனான இராசநாராயண சம்புவராயன் எழும்போதன் கங்கையாடி மாதையனுக்கு குட்டியம் என்ற ஊரை இராசநாராயண நல்லூர் என பெயரிட்டு சர்வமானியமாக அளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது.

இக்கல்வெட்டிலிருந்து கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் சமயநிலையையும், மன்னனுக்கும் அவரது மக்களுக்கும் இருந்த ஈடுபாட்டினையும் அறிய உதவுகின்றது.

## விரிஞ்சிபுரம் கல்வெட்டு

வேலூர் மாவட்டத்தில் உள்ள கல்வெட்டுகளிலேயே சிறப்பான கல்வெட்டு என்று போற்றத்தக்கது விரிஞ்சிபுரம் வழித்துணை நாயனார் கோயிலில் உள்ள ஓர் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு விசயநகரப் பேரரசின் மன்னரான இரண்டாம் தேவராயன் காலத்தில் கி.பி. 1425-இல் வெட்டப்பட்டதாகும்.

இக்கல்வெட்டு படைவீடு ராஜ்ஜியத்தில் உள்ள பிராமணர்கள் வழித்துணைநாயனார் கோயிலில் கூடி நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தைக் குறிப்பிடுகின்றது. அதன்படி அந்நாள்முதல் படைவீடு ராஜ்ஜியத்தில் உள்ள கன்னடிகர், தமிழர், தெலூங்கர் களாளர் முதலான அஸேஷ கோத்தரத்தார் திருமணங்கள் செய்யும் பொழுது கன்னியாதானமாகத் திருமணம் முடிக்க வேண்டும். கன்னிகாதானம் செய்யாமல் பொன் வாங்கிப் பெண் கொடுத்து திருமணம் செய்தால்

அரச தண்டனைக்கு உட்படுவர் மேலும் அவர்கள் பிராமணர் இனத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுவர் என்றும் முடிவு செய்தனர் எனக் கூறுகின்றது.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் திருமணத்தின்போது மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாருக்குப் பொருள் கொடுத்து மணம் முடிக்கும் முறை இருந்ததையும் அதனால் பல திருமணங்கள் இடையூறுகளைச் சந்தித்ததையும் அதனால் சமுதாயநிலை பாதிக்கப்பட்டதையும் எதிர்த்து நடந்த நிகழ்வுகளை இக்கல்வெட்டு தெரிவிப்பதுடன் திருமணத்தின்போது பொருள் பரிமாற்றம் கூடாது என்ற சமுதாயக் கொடுமையைக் கூறுவதால் இக்கல்வெட்டு சிறப்பான ஒன்றாகும்.

# வேலூர் மாவட்ட அருங்காட்சியகங்கள்

வேலூர் மாவட்டத்தின் வரலாற்றினையும், தொன்மையையும், பண்பாடு மற்றும் பழக்க வழக்கங்களையும் பொதுமக்களும் மாணவர்களும் அறிந்துகொள்ளும் வகையில் நான்கு அருங்காட்சியகங்கள் இயங்கி வருகின்றன. அவைகளில் ஆர்க்காடு மற்றும் வேலூர் அருங்காட்சியகங்கள் தமிழ்நாடு அரசாலும் வேலூர் கோட்டையில் உள்ள ஒரு அருங்காட்சியாகம் நடுவண் அரசாலும் ஏற்படுத்தப்பட்டவையாகும். வேலப்பாடியில் ஒரு பல் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

## ஆர்க்காடு அகழ்வைப்பகம்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் சார்பில் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் தமிழகத்தின் வரலாற்றை அறிந்துகொள்ளவும் புதிய வரலாற்றுச் சான்றுகளைக் கண்டறியவும் தொல்லியல் அகழாய்வுகள் நடத்தப்படுகின்றன. அவ்வகழாய்வுகளில் கிடைத்த தொல்பொருட்களை அப்பகுதிமக்களும் மாணவர்களும் கண்டு பயனுறும் விதமாக அகழ்வைப்பகங்கள் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் ஏற்படுத்தப்படுகின்றன. ஆர்க்காட்டில் உள்ள அகழ்வைப்பகம் அவ்வகையைச் சார்ந்த ஒன்றாகும்.

இவ்வகழ்வைப்பகத்தில் படைவீடு, ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கலைப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவைகளுடன் இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அருகில் உள் மாவட்டங்களில் இருந்தும் சேகரிக்கப்பட்ட பழைய கற்கால மற்றும் புதிய கற்காலக் கற்கருவிகளும், நுண்கற்கருவிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து இரும்புகாலம், பெருங்கற்காலம், சங்ககாலம் என வரலாற்று அறிஞர்களால் சுட்டிக்காட்டப்படும் காலத்தைச் சார்ந்த கருப்பு சிவப்பு மட்கலன்கள், இரும்பு ஆயுதங்கள், அக்கால மக்கள் பயன்படுத்திய மணிகள், சங்கு வளையல்கள், தக்கிளிகள், விளையாட்டுப் பொருட்கள்

முதலியன காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. சங்க காலக் கட்டடங்களைச் சார்ந்த செங்கற்கள் ரோமானியர் பானை ஓடுகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

அவைகளைத் தொடர்ந்து வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த குறிப்பாகச் சோழர்கள், விஜயநகர மன்னர்கள் மற்றும் சம்புவராயர்களின் காலத்தைச் சார்ந்த கற்சிலைகள், மட்கலன்கள், கலைப் பொருட்கள், கூரை ஓடுகள், சுடுமண் பொம்மைகள் முதலியன காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பல்லவர் காலம் முதல் ஆங்கிலேயர் காலம் வரையிலான பல்வேறு மன்னர்கள் வெளியிட்ட காசுகள் காட்சியகத்தில் உள்ளது. இவைகளைத் தொடர்ந்து இசுலாமியக் கலைகளையும், ஆர்க்காட்டு நவாப்புகளின் வரலாற்றையும் விளக்கும் கலைப் பொருட்கள், நீண்ட வாள்கள், கத்திகள், பீங்கான் பொருட்கள் காட்சிப்டுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தின் பல்வேறு வரலாற்றுச் சின்னங்களின் புகைப்படங்கள் வரலாற்ளை விளக்கிக் கூறும் தகவல் பலகைகளும் அகழ்வைப்பகத்தில் மாணவர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. திருக்குறள், இராமாயணம், மருத்துவம் போன்ற ஓலைச் சுவடிகளையும் இங்கு கண்டறியலாம். மொத்தம் 370 அரிய பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இவைகளுடன் வேலூர் மாவட்டத்தில் உள்ள முக்கியமான கல்வெட்டுகளின் மசிப்படிகளும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியிடும் நூல்கள் இங்கு காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளது. நூல்களைச் சலுகை விலையில் பெற்றுச் செல்லலாம்.

இவ்வகழ்வைப்பகம் வெள்ளிக்கிழமை தவிர வாரத்தின் ஏனைய நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை பொது மக்கள் பார்வையிட திறந்திருக்கும். தேசிய விடுமுறை நாட்களில் விடுமுறை நாளாகும். பெரியவர்கள் நுழைவுக் கட்டணமாக ரூபாய் ஐந்தும், சிறியவர்கள் நுழைவுக் கட்டணமாக ரூபாய் மூன்றும் செலுத்த வேண்டும்.

**வேலூர் அருங்காட்சியகங்கள்**

வேலூர் கோட்டையில் தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத் துறையின் சார்பில் ஒரு அருங்காட்சியகமும் நடுவண் அரசின் தொல்லியல் துறையின் சார்பில் ஒரு அருங்காட்சியமும் இயங்கி வருகின்றன. அவ்வருங்காட்சியகங்களிலும் வேலூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கிடைத்த கற்சிலைகள், கலைப் பொருட்கள், கல்வெட்டுகள், ஆயுதங்கள், பழங்காசுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

# வேலூர் சிப்பாய்ப் புரட்சி (1806)

இந்திய வரலாற்றில் சிப்பாய்ப் புரட்சி என்றால் அது 1857ல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக இந்தியா முழுவதும் ஆங்காங்கே சிற்றரசர்களாலும், சிப்பாய்களாலும் நடத்தப்பட்ட சிப்பாய்க் கலகம் என்று குறிப்பிடப்படும் முதல் சுதந்திரப் போரையே குறிக்கும். ஆனால் இம்முதல் சுதந்திரப் போருக்கு முன்னோடியாக அமைந்தது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே அதாவது 1806 -ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 10-ஆம் நாள் வேலூரில் நடைபெற்ற வேலூர் சிப்பாய்ப் புரட்சி என்றால் அது மிகையன்று.

கர்நாடகப் போரில் திப்பு வீரமரணமடைந்த உடன் திப்புவின் புதல்வர்கள் மொஹித்தீன் மற்றும் முசுதீன் உட்பட திப்புசுல்தான் குடும்பத்தினர் அனைவரும் சிறைபிடிக்கப்பட்டு வேலூர் கோட்டையில் சிறைக் கைதிகளாக அடைக்கப்பட்டிருந்தனர். அங்கு காவலுக்காக 1800 இந்தியச் சிப்பாய்களும் 400 ஐரோப்பியச் சிப்பாய்கள், அலுவலர்கள் மற்றும் அவர் தம் குடும்பத்தினரும் இருந்தனர்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்ட படையில் இருந்த இந்தியச் சிப்பாய்கள் பெரும் அதிருப்தியில் இருந்தனர். ஆங்கிலேயச் சிப்பாய்களுடன் ஒப்பிடுகையில் அவர்களுக்குக் குறைந்த ஊதியமே வழங்கப்பட்டது. அவர்களுக்கு

சரியான பதவி உயர்வும் ஊதிய உயர்வும் வழங்கப்படவில்லை. ஆங்கிலேய அலுவலர்களின் மிகுந்த கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடக்க வேண்டிய நிலையும் நிலவியது. எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களின் மதச் சின்னங்களான கும்குமம், திருநீறு போன்றவற்றை நெற்றியிலிடக் கூடாது என ஆங்கிலேயர் ஆணை பிறப்பித்தனர். இவ்வாறான நிலையில் இந்தியச் சிப்பாய்கள் மிகுந்த மனப்புழுக்கத்திற்கிடையே பணிபுரிந்து வந்தனர். இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல் 1806-ஆம் ஆண்டு மே மாதம் ஆறாம் நாள் 4 சிப்பாய்களுக்கு புதியத் தலைப்பாகைகள் வழங்கப்பட்டன அத்தலைப்பாகைகள் பசு போன்ற மிருகங்களின் தோலால் செய்யப்பட்டவைகளாகும் அதனையும் இந்தியச் சிப்பாய்கள் ஏற்கமறுத்து தலையில் துண்டு கட்டிக்கொண்டு இராணுவ அணி வகுப்பில் பங்கேற்றதுடன் துப்பாக்கிகளையும் எடுக்க மறுத்தனர். இவ்வாறு பல்வேறு முனைகளிலும் மகிழ்ச்சியற்றிருந்த சிப்பாய்கள் திப்புவின் மகன்களின் தலைமையில் கோட்டையில் 1806 ஆண்டு ஜுலைத் திங்கள் 10-ஆம் நாள் புரட்சியில் இறங்கினர். இரவு முழுவதும் திட்டமிட்டு திடீர் என புறப்பட்ட இந்தியச் சிப்பாய்கள் ஐரோப்பியக் காவலர்களைக் கொன்று குவித்தனர். இத்துடன் ஐரோப்பிய அதிகாரிகளின் குடியிருப்புப்பகுதிகளையும் தாக்கி அழித்ததுடன் ஐரோப்பிய சிப்பாய்கள் மட்டுமே இருந்த 67-வது படைப்பிரிவையும் சூழ்ந்து கொண்டு தாக்கினர். அப்படைப்பிரிவில் பணி செய்த பாதிக்கும் மேலான ஐரோப்பியச் சிப்பாய்கள் செத்து மடிந்தனர். அதிகாரிகளின் வீடுகளிலும் குண்டு மழையைப் பெய்ய விட்டனர். ஓடி ஒழிந்த அதிகாரிகளையும் சுட்டுப் பொசுக்கினர். கோட்டையையும், கொத்தளங்களையும் பிடித்தனர். கோட்டை முழுவதும் இந்தியச் சிப்பாய்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. 1806-ஆம் ஆண்டு காலை 11 மணி வரை இந்நிலை நீடித்தது. . . கோட்டையில் ஆங்கிலேயர் கொடி இறக்கப்பட்டு திப்புவின் புலிக்கொடி பறக்கவிடப்பட்டது.

ஆனால் கோட்டைக்கு வெளியில் இருந்த „மேஜர் கூட்ஸ்... என்பவர் இராணிப்பேட்டையில் இருந்த குதிரைப்படைக்கு தகவல் அனுப்பினார். அப்படை சுமார் 11 மணிக்கு வேலூர் வந்தடைந்தது

துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் உபயோகப்படுத்தி இந்தியச் சிப்பாய்களால் அடைக்கப்பட்ட கோட்டையின் கதவுகளைத் திறந்தனர். புரட்சி செய்த 850 இந்திய வீரர்களைச் சுட்டுக் கொன்றனர். 600 வீரர்களைச் சிறைப்பிடித்து திருச்சிராப்பள்ளிக்குக் கைதிகளாக அனுப்பினர். 17 இந்திய அலுவலர்களைப் பிடித்து கோட்டையின் மேற்குப் பகுதிக்குக் கொண்டு சென்று தூக்கிலிட்டும் துப்பாக்கியால் சுட்டும் கொன்றனர். சிப்பாய்களின் சில மணி நேரப் புரட்சி அடக்கப்பட்டது.

இப்புரட்சியை முறியடித்த உடன் உண்மைநிலையைக் கண்டறிய மேஜர் ஜெனரல் பேட்டர் தலைமையில் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட விசாரணைக் குழு 12-7-1806ல் அமைக்கப்பட்டது. இக்குழு சம்மந்தப்பட்ட அனைவரிடமும் விசாரணை நடத்தி தனது அறிக்கையை 9-8-1806 அன்று அரசுக்கு அளித்தது. இந்தியர்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தியதாலும் திப்புவின் மகன்களின் ஆட்சியை மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தாலும் புரட்சி ஏற்பட்டதாக அவ்வறிக்கை சுட்டிக் காட்டியது.

கலகத்தில் ஈடுபட்ட சிப்பாய்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அன்று பணிக்கு வராத இந்தியச் சிப்பாய்களும், அலுவலர்களும் பணியில் இருந்து நீக்கப்பட்டனர். வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டிருந்த திப்புவின் உறவினர் அனைவரும் கல்கத்தா சிறைக்கு மாற்றப்பட்டனர். கம்பெனிப்படையின் வெற்றிக்குப் பாடுபட்ட ஆங்கிலேயச் சிப்பாய்களுக்கும் அலுவலர்களுக்கும் விருதுகளும், பரிசுகளும், பதவி உயர்வும் வழங்கப்பட்டது. மொத்தத்தில் இந்தியத் தரப்பில் 3000த்துக்கு மேற்பட்டவர்கள் இப்புரட்சிக்காகத் தங்கள் இன்னுயிரை ஈந்தனர். இவ்வாறு வேலூர் சிப்பாய்ப் புரட்சி ஒரே நாளில் சில மணி நேரமே நடைபெற்றாலும் பின்னாலில் ஏற்பட்ட சுதந்திர வேட்கைக்கு அது வழிகாட்டியது என்றே சொல்லலாம். இன்றைக்கும் இந்தியத் திருநாட்டின் பாதுகாப்புப் படைகளின் பல்வேறு பிரிவுகளிலும் இம்மாவட்டத்தின் இராணுவ வீரர்களும் அலுவலர்களும் சிறப்புறப் பணி செய்து இம்மாவட்டத்தின் சிப்பாய்களின் வரலாற்றுக்குப் பெருமைச் சேர்த்து வருவது இங்கு பெருமிதத்துடன் நினைவு கூறத்தக்க ஒன்றாகும்.

# வேலூர் மாவட்டத்தின் சுருக்கமான வரலாறு

இன்றைய வேலூர் மாவட்டம் கி.பி. 1801-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மாவட்டமாகும். இம்மாவட்டம் இன்றைக்குச் சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றினைத் தன்னகத்தே கொண்டது. சற்றே மேலோட்டமாக இம்மாவட்டத்தின் வரலாற்றுப் போக்கினை நோக்குவோம். வேலூர் மாவட்டத்தில் உள்ள அரக்கோணம் வட்டத்தில் தொல்லியல் ஆய்வாளர்களால் பழைய கற்காலக் கருவிகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளது. எனவே இங்கு ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் வாழ்ந்தான் என் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பழைய கற்காலத்தினைத் தொடர்ந்து வந்த புதிய கற்கால மனிதன் இம்மாவட்டத்தில் வாழ்தற்கான ஆதாரமாக அமிர்தி காட்டுப் பகுதிகளிலும், பைரவநாத மலை, ஜவ்வாது மலை, புலிமேடு, எசையனூர் ஆகிய இடங்களிலிருந்து புதிய கற்காலக் கருவிகளும் அவர்கள் பயன்படுத்திய கையால் செய்யப்பட்டப் பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தின் புதிய கற்கால மனிதனின் வரலாறு சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும் இம்மாவட்டத்தில் வாழ்ந்த புதிய கற்கால மனிதனின் வாழ்க்கை முறைகளை நாம் நன்கு அறிந்துகொள்ள இம்மாவட்டத்தில் அப்புகல்லு மற்றும் பையம்பள்ளி ஆகிய இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகள் நமக்குப் பெரிதும் துணை செய்கின்றன.

கற்காலங்களைத் தொடர்ந்து தமிழகத்தின் ஏனையப் பகுதிகளைப் போன்றே வேலூர் மாவட்டத்திலும் பெருங்கற்காலம் என்னும் இரும்புக்காலம் குறிப்பிடத்தக்கதாகும். இப்பண்பாட்டு நாகரீகம் இம்மாவட்டத்தில் சற்று ஏறத்தாழ கி.மு. 500 முதல் கி.பி. 300 வரை நிலவியது. இப்பண்பாட்டுக் கால மனிதர்கள் இம்மாவட்டத்தில் புலிமேடு, அப்புக்கல்லு, ஊசூர், கரிவேடு, நத்தம், திருப்பத்தூர், பைரவநாதமலை, அரியூர், காவனூர், திருமணி, மலையாம்பட்டு, கல்லேரிமலை, அதிணாவூர், கரிக்கந்தாங்கல், நத்தம் புதூர், வேப்பூர், ரங்க சமுத்திரம் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் வாழ்ந்ததற்கான தடயங்களும், பண்பாட்டு எச்சங்களும் கிடைத்துள்ளன. கி.பி. 3-ஆம்

நூற்றாண்டு முதல் கி.பி. 6–ஆம் நூற்றாண்டு வரை இம்மாவட்டத்தில் வரலாற்றுத் தடயங்கள் ஏதும் அறிய இயலாத இருண்ட காலமாகும்.

இம்மாவட்டத்தின் வரலாற்றில் கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சியுடன் புதிய ஒளி வெள்ளம் பாய்ந்தது. பல்லவர்களின் எழுச்சி மிக்க ஆட்சி வேலூர் மாவட்டத்தில் கி.பி. 6–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9–ஆம் நூற்றாண்டு வரை நிலவியது. சுமார் முன்னூறு ஆண்டுகள் நிலவியது. பல்லவர் ஆட்சியில் வேலூர் மாவட்டம் தொண்டை மண்டலத்தின் அருவா நாடு எனவும் அருவா வடதலை நாடு எனவும் வழங்கப்பட்டது. பல்லவர்களின் பெறுமையை வேலூர் மாவட்டத்தில் பறைசாற்றும் திருப்பான் மலை குடையவறை மகேந்திரவாடி குடைவறைக் கோயில் அருமாமலை குகை ஓவியம், உதயேந்திரம் கோயில் ஆகியவை இன்றும் நின்று நிலவுகின்றன. இவைகளேயன்றி அம்மன்னர்கள் வெட்டிய பல்வேறு கல்வெட்டுகளும் வெளியிட்ட காசுகளும், செப்பேடுகளும் வரலாற்று அறிஞர்களால் வெளிக்கொணரப்பட்டுள்ளன. மாமண்டூருக்குப் பாலாற்றில் இருந்து வாய்க்கால் வெட்டப்பட்டது. காவேரிப்பாக்கம் ஏரி பல்லவர்களால் வெட்டப்பட்டதாகும்.

பல்லவர் ஆட்சியினைத் தொடர்ந்து வேலூர் மாவட்டம் சோழர்களின் ஆட்சிக்கு உட்பட்டது. சோழர்கள் காலத்தில் வேலூர் மாவட்டம் செயங்கொண்டச் சோழ மண்டலம் என்ற மண்டலத்தில் அடங்கி இருந்தது. கி.பி. 9–ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல் கி.பி. 13–ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியில் சோழர்களின் ஆட்சி நிலவியது. பெரும்பாலான சோழர்கள் ஆட்சிக் காலத்தில் வேலூர் மாவட்டம் சோழப் பேரரசின் வட எல்லையாக அமைந்திருந்ததால் பேரரசின் போர் முறை உட்பட முடிவுகளை மேற்கொள்ளும் ஒரு அரசப் பிரதிநிதி இப்பகுதியில் இருந்து கொண்டே இருந்திருக்க வேண்டும். சோழர்களின் ஆட்சியில் இம்மாவட்டத்தில் கழனிப்பாக்கம், மேல்பாடி. திருவலம், திருப்பாற்கடல், களத்தூர், காவேரிப்பாக்கம், ஒழுகூர், வளையாத்தூர், குடிமல்லூர், தேவதானம், சோழவரம், எசையனூர், சக்கரமல்லூர், வேப்பூர், திருமால்பூர் ஆகிய ஊர்களில் சோழ மன்னர்களால் கோயில்கள் கட்டப்பட்டன. கல்வெட்டுகள் வெட்டப்பட்டன. பராந்தகச் சோழன் காலத்தில் இம்மன்னன் காலத்தில் வேலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஏரிகள், தூம்புகள் பாசனக் குளங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இம்மன்னன் காலத்தில் திருப்பாற்கடல் என்ற ஊரில் உள்ள கரபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டுகள் சோழர்களின் ஆட்சியில் இருந்த வாரியங்களைப் பற்றியும் அவற்றின் பணிகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. சோழப் பேரரசின் ஆட்சி வேலூர் மாவட்டத்தில் கி.பி. 1279 வரை நீடித்தது. பல்லவர் மற்றும் சோழர்களின் காலத்தில் இப்பகுதியில் இராட்டிரகூட மன்னர்கள் மற்றும் சாளுக்கியர் கல்வெட்டுகளும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

சோழர்களின் ஆட்சியை அடுத்து வேலூர் மாவட்டம் கி.பி. 13 மற்றும் 14-ஆம் நூற்றாண்டுகளில் சம்புவராயர்களின் ஆட்சிக்கு உட்பட்டது. சம்புவராயர்களின் ஆட்சியில் இப்பகுதி படைவீடு ராஜ்ஜியம் என வழங்கப்பட்டது. இம்மன்னர்களின் ஆட்சி கி.பி. 1363 வரை நிலவியது. இம்மன்னர்கள் இப்பகுதியில் கலை பண்பாட்டு வளர்ச்சிக்கும், நீர்ப்பாசனம் மற்றும் வேளாண் பணிகளுக்கும் பல்வேறு நற்செயல்களைச் செய்தனர். வேப்பூர் வசிஸ்மீர்வரர் கோயில், குட்டியம் சிவன் கோயில். வண்ணான் குளம், சிவன் கோயில், படைவீட்டில் உள்ள அம்மையப்ப ஈஸ்வரமுடைய நாயனார் கோயில் (தற்பொழுது இக்கோயில் படைவீட்டில் இருந்து பிரித்து கொண்டு வந்து ஆரணியில் கட்டப்பட்டுள்ளது) படைவீடு வேணுகோபால சாமி கோயில், ரேணுகாம்பாள் கோயில், படைவீடு சிவன் கோயில், குடிமல்லூர் பூமிநாத ஈஸ்வரன் கோயில் ஆகிய கோயில்கள் வேலூர் மாவட்டத்தில் சம்புவராயர்களால் கட்டப்பட்ட கோயில்களாகும்.

சம்புவராயர்களின் ஆட்சியை அடுத்து வேலூர் மாவட்டம் கி.பி. 1363-ல் விஜயநகரப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டது. இம்மன்னர்களும் வேலூர் மாவட்டத்தில் கோயில்களைக் கட்டினர். பள்ளி கொண்டா உத்தர ரங்கநாத சுவாமி கோயில் ஜலகண்டீஸ்வரர் கோயில் வேலூர் உத்திரகாமேஸ்வரர் கோயில் ஆரணி, திருப்பாற்கடல் பள்ளிகொண்டா ஸ்ரீரங்கநாதரங கோயில் மற்றும் வழித்துணை நாயனார் கோணில் விரிஞ்சிபுரம் ஆகிய ஊர்களில் இம்மன்னர்களின் கலைச் சேவையை நாம் அறியலாம். விசயநகர ஆட்சியை அடுத்து கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வேலூர் மாவட்டம் சிறிது காலம் போசாள மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டது. போசாளர்களால் ஆட்சி செய்யப்பட்டாலும் அவர்களின் கல்வெட்டுகளும், கல்வெட்டு ஆணைகளும் தமிழில் உள்ளது குறிப்பிடத்தக்கது.


போசாளர்களை அடுத்து வேலூர் மாவட்டத்தை நாயக்க மன்னர்கள் (கி.பி. 1595 - 1604) ஆட்சி செய்தனர். அவர்களின் சின்னபொம்மு நாயக்கன் மற்றும் லிங்கமநாயக்கர் ஆகியோர் வேலூரைத் தலைநகமாகக் கொண்டு ஆட்சி செய்தனர். சின்ன பொம்மு நாயக்கர் காலத்தில்தான் புகழ்பெற்ற வேலூர் கோட்டை கட்டப்பட்டது. இக்கோட்டையும், ஜலகண்டேஸ்வரர் கோயிலில் உள்ள கல்யாண மண்டபத்தின் கலையழகும், சிற்பங்களும் நாயக்கர் ஆட்சியின் மாட்சிமையை நமக்கு இன்றும் கூறும் சாட்சியங்களாக உள்ளன.

நாயக்கர் ஆட்சியை அடுத்து வேலூர் மாவட்டம் பீஜப்பூர் சுல்தான்களின் ஆட்சிக்கு 1646-ல் உடன்பட்டது. கி.பி. 1676-இல் சிவாஜியின் ஒன்றுவிட்ட சகோதரரான துக்கோஜி வேலூரைக் கைப்பற்றினார். இதனால் 17-ஆம் நூற்றாண்டில் வேலூர் மாவட்டம் மராட்டியர் ஆட்சியின் கீழ்வந்தது. கி.பி. 1708-இல் தாவூத்கான் தமது தலைநகரைச் செஞ்சியில் இருந்து ஆர்க்காட்டிற்கு மாற்றினான். ஆகவே இப்பகுதி 1708 முதல் ஆர்க்காடு நவாப்புகளின் ஆட்சிக்கு உட்பட்டப் பகுதியானது. ராபர்ட்கிளைவ் 1751-இல் ஆர்க்காட்டைக் கைப்பற்றி ஆர்க்காடு நவாப்புகளின் போர்வையில் கி.பி. 1801 வரை ஆங்கில ஆட்சி நடைபெற்றது. கி.பி. 1801-ல் கர்நாடக நவாப்புகளின் முழு உரிமையும் ஆங்கிலேயர்களால் பறிக்கப்பட்டு சித்தூர் மாவட்டத்தின் ஒரு பகுதியாக வேலூர் மாவட்டம் இருந்து வந்தது. கி.பி. 1911-ல் சித்தூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. சித்தூர் மாவட்டமும் வடஆர்க்காடு மாவட்டமும் (இன்றைய வேலூர் மாவட்டமும்) உதயமானது. கி.பி. 1801-ல் ஸ்ட்ராட்டன் என்பவர் இம்மாவட்டத்தின் முதல் ஆட்சித்தலைவரானார்.


அதன்பிறகு 1928-ல் வடஆர்க்காடு மாவட்டத்தில் இருந்து தெலுங்கு பேசும் மக்களைக் கொண்ட கங்குந்தி ஜமீன் பிரிக்கப்பட்டு சித்தூர் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. மீண்டும் நிர்வாக வசதிக்காக இம்மாவட்டம் 1951-ல் ஒரு மாறுதலைக் கண்டது. 30-9-1989-ல் வடஆர்க்காடு மாவட்டம் வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் எனவும் திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்ட திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டமாகவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. 1-7-1997 அன்று மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு வேலூர் மாவட்டம் என வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு வேலூர் மாவட்டம் சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளின் வரலாற்றையும், பண்பாட்டுச் சின்னங்களின் எச்சங்களையும் தன்னகத்தேக் கொண்ட மாவட்டமாக விளங்கி வருகின்றது.

# துணை நூல்கள்


1. Neolithic Cultures of India - K.S. Ramachandran.
2. Rock Art of Tamilnadu - Dr. T.S. Sridhar, I.A.S.
3. Excavation at Paiyampalli - S.R. Rao.
4. கல்வெட்டுக் காலாண்டிதழ் 70 – தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு
5. தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள் - சு. ராசவேலு, கோ.திருமூர்த்தி
6. செங்கம் நடுகற்கள், –முனைவர் இரா. நாகசாமி
7. ஓவியப்பாவை – முனைவர் இரா. நாகசாமி
8. வேலூர் மாவட்டம் ஒரு கண்ணோட்டம் – தினமணி இணைப்பு
9. Padavedu Excavation - Natana. Kasinathan
10. தமிழகத் தொல்பழங்காலமும் பூண்டி அகழ்வைப்பகமும் – முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,
11. வேலூர்ப் புரட்சி – பேராசிரியர் முனைவர் ந. சஞ்சீவி
12. ஆர்க்காடும் அகழ்வைப்பகமும் – து. துளசிராமன்
13. தென்னாட்டுச் சிவாலயங்கள் தொகுதி I
14. சம்புவராயர்கள் வரலாறு – பேராசிரியர்கள் தங்கவேல், இல. தியாகராசன்
15. வேலூர் சிப்பாய்ப் புரட்சி 200 – ஆம் ஆண்டு நிறைவு விழா மலர்
16. இந்தியக் குடியரசு பொன்விழா மலர் – வேலூர் மாவட்டம்
17. காப்பலூர் – க. ஈஸ்வரன்
18. மேல்பாடி – பூ. கல்பனா
19. S.I. Volums
20. தொல்குடிகள் – வேளிர், முனைவர் இரா. பூங்குன்றன்
21. கல்வெட்டுக் காலாண்டிதழ் 74 – தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு, அவுரக்கரை தாழி, மா. கலைவாணன்
22. அரக்கோணம் வட்டத்தில் புதிய கல்வெட்டுகள் – முனைவர் ப. வெங்கடேசன், ஆவணம் – இதழ் 17.



முத்துமண்டபம் இலங்கையை ஆண்ட கடைசி
தமிழ் மன்னன் விக்ரமராஜசிங்கா குடும்பத்தினர்
கல்லறை




ஆற்காடு டெல்லி கேட்-1751




திருவலம் இரும்பு பாலம் - ஆங்கிலேயர் காலம்




பாலமதி - அழகிய மலைபாதை




வேலூர் கோட்டையின் கவின்மிகு தோற்றம் - கி.பி. 16-ஆம் நூற்றாண்டு
வேலூர்



செம்பு போர்வாள்கள்
அப்புக்கல் புதையல் - கி.மு. 400




கஜோரா - மலைகோட்டை
சத்துவாச்சாரி - வேலூர்




வள்ளிமலை - முகப்பு தோற்றம்




பல்லவர் குடைவரைக் கோயில்
திருப்பான்மலை
விளாப்பாக்கம் - ஆற்காடு வட்டம்



காவேரிப்பாக்கம் ஏரி
பல்லவர் காலம்



வேலூர் கோட்டை - மதில் சுவர்ப்பகுதி
கி.பி. 16-ஆம் நூற்றாண்டு



கங்கர்பாணி, வீரக்கல்
கி.பி. 9-ஆம் நூற்றாண்டு
மூங்கப்பட்டு-குடியாத்தம் வட்டம்




1806 - வேலூர் புரட்சியில் நினைவுத் தூண்




வேலூர் மாவட்டம் வரைபடம்

